பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 20 வெள்ளிக்கிழமை (03-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:159

* வாரம் ஏழு நாளும் 12 மணி நேரம் பயணிகளை அனுமதிக்குக!
* உணவு வாகனத் தொடரணிக்கு 24 மணிநேரமும் திறந்து விடுக!!

# கண்டி வீதிப் போக்குவரத்து கட்டுப்பாட்டைத் தளர்த்துக!

## கண்காணிப்புக் குழுவினர் மூலம் விடுதலைப் புலிகள் கோரிக்கை

கிளிநொச்சி,மே3

**யாழ். - கண்டி வீதி வழியேயான போக்குவரத்துக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.**

**நோர்வே கண்காணிப்புக்குழுவின் உபதலைவரை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுக்காலை கிளிநொச்சியில் சந்தித்து உரையாடியபோதே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.**

கண்காணிப்புக் குழுவின் உப தலைவர் ஹக்ரப் கோக்லண்ட் நேற்றுக்காலை விசேட ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சி வந்தார்.

பின்னர் அவரும் கண்காணிப்புக் குழுவின் வன்னிக்கான பிரதிநிதி பொடி கார்த்தி கெய்னனும் கிளிநொச்சியில் அமைந்துள்ள புலிகளின் அரசியல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரைப் படகுத் தாக்குதல்; முரண்பாடான தகவல்கள்

கொழும்பு,மே3

வாகரை கடற்பகுதியில் நேற்றுமுன தினம் மாலை இடம்பெற்ற படகுத் தாக்குதல் சம்பவம் குறித்து முரணான தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடற்படையினர் புலிகளின் இரண்டு படகுகளை (ட்றோலர்களை) அடையாளம் கண்டு நெருங்கிய சமயம் அவற்றில் ஒன்று தன்பாட்டில் வெடித்துச் சிதறியதாகவும் -

மற்றைய படகு அப்பகுதியில் தென்பட்ட சிவிலியன் படகுகளுக்கு இடையில் நுழைந்து தப்பிவிட்டதாகவும் -

ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

ஆனால் வாகரை, சல்லித் தீவுப் பகுதியில் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் மீது கடற்படையினர் நடத்திய தாக்குதலில் மூன்று மீனவர்களின் படகுகள் அழிக்கப்பட்டதாக புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் என்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் கரிகாலனுடன் இன்று பேச்சு

மட்டக்களப்பு,மே.3

மட்டக்களப்புக்கு வருகை தந்துள்ள யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரொண்ட் புருகோவிட் விடுதலைப் புலிகளின் அம்பாறை - மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை விசேட பொறுப்பாளர் க.கரிகாலனுடன் இன்று பேச்சு நடத்தவிருக்கின்றார்.

வாகரைக் கடலில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற படகுத் தாக்குதல் குறித்தும் -

கிழக்கில் இடம்பெறும் யுத்த நிறுத்த மீறல்கள் குறித்தும் -

இப்பேச்சில் விரிவாக ஆராயப்படும்' என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்த புருகோவிட் மட்டக்களப்பு அரச அதிபருடன் கலந்துரையாடினார்.

மட்டக்களப்பு நிலைமைகள் குறித்தும், மக்களின் இயல்பு வாழ்க்கை குறித்தும் அவர் கேட்டறிந்தார்.(உ-3)

**முச்சந்தி முரளி**



பின்ன.... சோழியன் குடுமி சும்மா ஆடுமே.....?

## தடை நீக்கம் குறித்து ஆராய இன்று உயர் மட்ட மாநாடு!

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட்டுகிறார்

கொழும்பு,மே.3

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதா அல்லது தளர்த்துவதா என்பது குறித்து முடிவு செய்வதற்காக உயர் மட்ட மாநாடு ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று கூட்டுகின்றார்.

சிரேஷ்ட அமைச்சர்கள், அரச அதிகாரிகள், படை அதிகாரிகள் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

புலிகள் மீதான தடையை பேச்சு ஆரம்பிக்க முன்னர் முற்றாக நீக்குவதா? அல்லது பேச்சுக்காலத்தில் அதை இடைநிறுத்தி வைப்பதா? என்பது தொடர்பாக முக்கியஸ்தர்களின் கருத்துக்களை அறிவதற்காகவே இந்த மாநாட்டைப் பிரதமர் கூட்டியுள்ளார்.

அடுத்தவாரம் இடம்பெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

(உ-3)

## மற்றொரு மகாநாயக்கரும் சமாதான முயற்சிக்கு ஆதரவு

கொழும்பு,மே3

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது அரசும் தற்போது முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகளுக்கு ராமய நிக்காயாவின் மகா நாயக்கர் தேவங்கனியே வேதாலங்கார தேரரும் ஆதரவு தெரிவித்திருக்கின்றார்.

பிரதமரும், அமைச்சர் கரு ஜெயசூரியவும் நேற்று அவரைச் சந்தித்தபோதே தமது ஆதரவை அவர் வெளியிட்டார்.

"தற்போதைய யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் பிரதமருக்கும் அரசுக்கும் ஆதரவு வழங்குவதே பிரதான பணியாகும்.

"நாட்டின் இனப்பிரச்சினையை வைத்து பலரும் அரசியல் லாபம் தேடி வருகின்றனர். இது மனவேதனைக்குரிய விடயமாகும்.

"பிரதமர் மேற்கொள்ளும் இந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் அறிக்கை மற்றும் ஒப்பந்த ஏற்பாடுகள் சிலவற்றினால் நாட்டின் பாதுகாப்புக்குப் பாதிப்பு

### ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுகின்றார்

கொழும்பு,மே3

புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள சில ஏற்பாடுகளும் விடுதலைப் புலிகளின் தலைவரது சில அறிக்கைகளும் நாட்டின் பாதுகாப்புக்கு பாரதூரமான அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன.

- இப்படித் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தற்போதைய நிலைமை குறித்து மகா சங்கத்தினர் எழுப்பியுள்ள சில கேள்விக்கு பதில் அளித்து தாம் விடுத்துள்ள அறிக்கையிலேயே ஜனாதிபதி இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் இறைமையையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

நாட்டின் தலைவி என்ற வகையி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நீர்கொழும்பில் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம்

### வெளிநாடு செல்ல முயன்று பிடிபட்டோர்

கொழும்பு,மே3

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர்களில் ஒரு பிரிவினர் நேற்றுமுன் தினம்முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

வெளிநாடுகளுக்குச் செல்லவிருந்த இவர்கள் குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தை மீறினர் என்ற குற்றஞ்சாட்டின் பேரில் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தனர். பிணை வழங்கப்படாத நிலையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் இராணுவத் தளம் அமைக்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு அறவே இல்லை

### ரூபவாஹினிப் பேட்டியில் அமெ. தூதுவர் ஆஷ்லி வில்ஸ்

கொழும்பு,மே3

இலங்கையில் இராணுவத் தளம் அமைக்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு அறவே இல்லை.

இப்படி அமெரிக்க தூதுவர் ஆஷ்லி வில்ஸ் ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி அவருடைய பேட்டி ரூபவாஹினியில் ஒளிபரப்பாகியது. பேட்டி கண்டவர் பிரதீப் அமிர்தநாயகம்.

கேட்கப்பட்ட சில கேள்விகளும் தூதுவர் அளித்த பதில்களும் வருமாறு:-

*கேள்வி:* இலங்கை சமாதான முயற்சியில் அமெரிக்க அரசு எந்த மாதிரி ஈடுபாடு கொண்டிருக்கிறது?

*பதில்:* இலங்கை அரசும் புலிகளும் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதே எமது நிலைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வீம்புக்காகவோ போர்வெறியாலோ விடுதலைப் புலிகள் போராடவில்லை

## நீதியான தீர்வுக்காகவே சமராடுகிறோம் என்கிறார் எழிலன்

வவுனியா,மே3

'தமிழீழ விடுதலைப் புலிகள் வீம்புக்காகவோ அல்லது போர்வெறி கொண்டோ போராடவில்லை. தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே போராடுகிறார்கள். நல்லதீர்வு கிடைக்குமேயானால் முதலில் விடுதலைப் புலிகளே சந்தோஷமடைவார்கள். எமது மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும் வரை போராடத் தயாராக இருக்கிறார்கள். தடைகளைத் தாண்டி சமாதானத்தை நெருங்குவதே புலிகளின் நோக்கம்.'

வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளரான எழிலன் நேற்றுமுன்தினம் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்ற மேதின பொதுக கூட்டத்தில் உரையாற்றுகையில் இவவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரனைக் கைது செய்ய முயற்சி மேற்கொள்ளப்படுமேயானால் ஒரு பெரும் அழிவின் ஆரம்பமாக அது அமையலாம் என்ற எச்சரிக்கையையும் அவர் தனது உரையில் விடுத்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றியதாவது:-

இந்தியா உட்பட சில தரப்பினர் பிரபாகரன கைது செய்யப்பட வேண்டும் என்று கூறுகின்றனர். அவ்வாறு நடைபெறுமேயானால் சூரியனையும் சந்திரனையும் இராகு விழுங்கி விட்டால் ஏற்படும் நிலைக்குச் சமமான நிலையே ஏற்படும். யுத்தத்தைக் கைவிட்டு சமாதானம் பற்றிய யோசனைகள் வெளியிடப்படும் இவ்வேளையில் பிரபாகரன் கைதுபற்றி குறிப்பிட்டு நெருப்புடன் விளையாடாதிருக்க வேண்டும்.

சமாதானத்துக்காக அர்ப்பணிப்பதை மட்டுமே இச் சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டும். தமிழ் மக்களுக்கு அநீதிகள் இழைக்கப்பட்டதாலேயே விடுதலைப் புலிகள் இயக்கம் உருவானது. அம் மக்களுக்குச் சமாதானம் பெற்றுக் கொடுக்கவே புலிகள் இயக்கம் போரிட்டது.

சமாதானத்தை எதிர்பார்த்தே புலிகள் இயக்கம் இம்முறை அரசியல் பேச்சுக்கு முன்வந்தது. இன்னமும் சமாதானம் ஏற்படாவிட்டாலும் அது பற்றிய எதிர்பார்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. சமாதானத்தை ஒரே தடவையில் அடைந்து விட முடியாது. சமாதானத்தை அடைவதற்கான தடைகளைத் தாண்டிச் சென்று சமாதானத்தை நெருங்குவதே புலிகள் இயக்கத்தின் நோக்கமாகும்.

- இவ்வாறு அவர் கூறினார். (ஒ)

# யாழ்.போதனா வைத்தியசாலை முழுமையான வசதிபெற உதவுக!

## ஜப்பானிய அமைப்பிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே3

யாழ்போதனா வைத்தியசாலையை சகல வசதிகளுடன் முழுமை பெற்ற மாவட்ட வைத்தியசாலையாக மாற்றுவதற்கு உதவுங்கள்.

- இவ்வாறு யாழ்.வைத்தியசாலை நிர்வாகத்தினர் ஜப்பானிய தொண்டு நிறுவனமான 'ஜெய்கா'விடம் கோரிக்கை மகஜர் சமர்ப்பித்துள்ளனர்.

நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட 'ஜெய்கா' வதிவிடப் பிரதிநிதிகள் கோபொய்சி மற்றும் ரணாக்கா ஆகியோரிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது. முன்னதாக 'ஜெய்கா' பிரதிநிதிகள் யாழ்போதனா வைத்தியசாலையின் நிலைமைகளை பார்வையிட்டதுடன் வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடல் ஒன்றினையும் நடத்தினர்.

இக்கலந்துரையாடலின் முடிவில் அவர்களிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டதாவது:-

யாழ்.போதனா வைத்தியசாலை ஒரு மாவட்ட வைத்தியசாலைக்குரிய தரத்தினை முழுமையாகப் பெற்றிருக்கவில்லை. அதில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இவ்வைத்தியசாலையை சகல வசதிகளும் கொண்டதாக மாற்ற உதவுக அல்லது குடாநாட்டில் நவீன வசதிகளுடன் மற்றொரு மருத்துவமனை கட்ட நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டது.

'ஜெய்கா' பிரதிநிதிகள் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை மதிப்பீடு செய்து வருகின்றமை குறிபபிடத்தக்கது. (ஒ-12-15)

## வெளிமாவட்டங்களுக்கு அனுப்ப

# யாழ். பிரதம தபாலகத்தில் ஒளிநாடாக்கள் கையேற்பு

யாழ்ப்பாணம்,மே3

குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு அனுப்புவதற்கான ஒளிநாடாக்கள் யாழ். பிரதம தபாலகத்தில் தற்போது கையேற்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

முன்னைய காலங்களில் ஒளிநாடாக்களை அனுப்பும் பணி வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் தொடங்கி உள்ளதாக யாழ்.பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்படுவதற்காக பிரதம தபாலகத்தில் கையளிக்கும் போது ஒளிநாடாவை முழுமையாக 'ரீவைண்ட்' செய்து தரும் படியும் -

ஒளிநாடாவை அனுப்புவோர் தமது தேசிய அடையாள அட்டையை கொண்டு வரும்படியும் கோரப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

திருமலையில் இருந்து 220 தபால் பொதிகள் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் -

இங்கிருந்து 30 தபாற்பொதிகள் அதே கப்பலில் திருமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் -

தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-12)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே3

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் உதைபந்தாட்ட லீக்குகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் போட்டிகளில் பங்குகொள்வதற்காக கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட அணி இந்த வாரஇறுதியில் யாழ்.வருகிறது.

கிளிநொச்சி மாவட்ட லீக்குக்கும் யாழ்.மாவட்ட லீக்குக்கும் இடையிலான ஆட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மாலை 4 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சம்மேளனம் இதற்கான ஏற்பாடுகளைச செய்து வருகின்றது. (எ)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் 7பேர் பங்குபற்றும் - ஹொக்கிச் சுற்றுப்போட்டில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணிக்கு - கிறாஸ் கொப்பர்ஸ் வி.க. 'பி' அணி எதிர் சென்றலைட்ஸ் வி.க. அணி.

★ மாலை 4.30 மணி - யாழ். பல்கலைக்கழக 'புளூஸ்' அணி எதிர் செவின்ஸ்ரார் வி.க. அணி.

★ மாலை 5 மணி - பற்றீஸியன் வி.க. அணி எதிர் கோப்பாய் வி.க. அணி. (ஐ-3)

★ ★ ★

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் அணி எதிர் நெடுந்தீவு பிரதேச செயலக அணி.

★ பளை பிரதேச செயலக அணி எதிர் சங்கானை பிரதேச செயலக அணி. (ஐ-86)

★ ★ ★

வலிவடக்கு,மே.3

தேசிய கபடிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட கபடிச் சுற்றுப்போட்டியில ஆண்கள் பெண்களுக்கான இறுதிப் போட்டிகளை யாழ்.மாவட்டத்தில் நடத்துவதற்கு கபடிச் சங்கத்தினர் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

இந்தப் போட்டியின் முன்னோடி போட்டியாக யாழ்மாவட்ட கபடிச் சங்கம் ஆண்கள், பெண்களுக்கான சுற்றுப் போட்டி ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை செயலாளர், யாழ். மாவட்ட கபடிச் சங்கம் 61, ஈச்ச மோட்டை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-86)

# நடிகை தேவிகா காலமானார்

சென்னை,மே3

திரைப்பட நடிகை தேவிகா நேற்று சென்னை தனியார் மருத்துவமனை ஒன்றில் காலமானார்.

உடல்நலக்குறைவு காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு நேற்று அதிகாலை உயிர் பிரிந்தது.

தமிழிலும், தெலுங்கிலுமாக 150 க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்த தேவிகா தமிழில் நெஞ்சம் மறப்பதில்லை, நெஞ்சில் ஓர் ஆலையம், ஆண்டவன் கட்டளை, ஆனந்த ஜோதி ஆகியவை உட்பட பல படங்களில் நடித்துள்ளார்.

கரகாட்டக்காரன் படத்தில் அறிமுகமான நடிகை கனகா இவரது மகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

# லண்டன் ஆலயம் உதவுகிறது

யாழ்ப்பாணம்,மே3

யாழ். போதனா வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு லேசர் உபகரணங்களை லண்டன் நகர முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் வழங்க உள்ளனர்.

இந்த ஆலயத்தில் இடம்பெற்ற உற்சவத்தில் சொற்பொழிவு நிகழ்த்தச் சென்றிருந்த செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் விடுத்த கோரிக்கையின் பேரில் இந்த உபகரணங்கள் வழங்கப்படவிருக்கின்றன. (ஒ-3)

# பருத்தித்துறையில் இருந்து முகமாலைக்கு பஸ் சேவைகள்

வடமராட்சி,மே3

பருத்தித்துறையில் இருந்து முகமாலைக்கு கொடிகாமம் ஊடாக புதிய பஸ் சேவை ஒன்றை வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஆரம்பிததுள்ளது.

இந்த வழித்தடத்தில் தினமும் காலையிலும் மாலையிலுமாக இரு சேவைகள் நடத்தப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டது. (ஒ-173)

# தொண்டர் ஆசிரியர் போராட்டம் நேற்று 3ஆம் நாளாக தொடர்ந்தது

## இடைநிறுத்தும் முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம்,மே3

நிரந்தர நியமனம் வழங்குவது உட்பட 5 கோரிக்கைகளை முன் வைத்து யாழ்.மாவட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களும், பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் மேற்கொண்டு வரும் மறியற் போராட்டம் காரணமாக யாழ்.வலய கல்வித் திணைக்களம் மற்றும் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தின் தொழிற்பாடுகள் நேற்று மூன்றாம் நாளாகவும் முடக்கப்பட்டன.

நூற்றுக்கணக்கான தொண்டர் ஆசிரியர்களும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் இப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் மேதினத்தையொட்டி மறியற் போராட்டம் இடைநிறுத்தப்பட்டு நேற்று தொடர்ந்து நடந்தது.

இதற்கிடையில் நேற்று மறியற் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் துணைச் செயலாளர் த.பஞ்சலிங்கம், யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவராஜா ஆகியோர் பேச்சு நடத்தினர்.

போராட்டத்தை இடைநிறுத்தினால் வடக்குக்கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் க.சண்முகலிங்கத்துடன் தொடர்புகொண்டு, இப் பிரச்சினை தொடர்பாக வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநருடன் நேரில் சந்தித்து பேச ஒழுங்கு செய்து தருவதாக அவர்களிருவரும் அப்போது தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

ஆனால் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் போராட்டத்தை இடைநிறுத்தாமலேயே தங்களுக்கு நேரம் ஒழுங்கு செய்து தருமாறு இவர்களிடம் கோரியதாகவும் -

இதனை ஏற்க மறுத்த மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும், தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் செயலாளருடன் தொடர்புகொண்டு நேரத்தை ஒதுக்கித்தம்மை அழைத்தால் தாம் பேச்சில் கலந்துகொள்ள வருவதாகத் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-51-86)

# தொண்டர் ஆசிரியர் நியமனம் குறித்து கல்வியமைச்சின் செயலர் சிபாரிசு

## மறியற்போரைக் கைவிடக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே3

'வடக்கு - கிழக்கில் ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னர் வழங்கப்படவுள்ள 3 ஆயிரம் ஆசிரியர் நியமனங்களில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு இடம் அளிக்கப்படும். இதில் யாழ். மாவட்டத்திற்கு நூற்றுயிருபத்தைந்து இடங்கள் ஒதுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளேன்' - இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சுச் செயலாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மூவாயிரம் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதை அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த மூவாயிரம் நியமனங்களில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களும் உள்ளடக்கப்படுவர். இந் நியமனங்கள் இவ்வாண்டு ஒக்ரோபர் மாதத்திற்கு முன்னர் படிப்படியாக வழங்கப்படும். விளம்பரம், ஆளசேர்ப்பு நடைமுறை ஆகியவற்றை செய்வதற்கு சில மாதங்களாவது செல்லும். ஆயிரம் தொண்டர் ஆசிரியர் நியமனங்களுள் பன்னிரெண்டரை வீதமாவது யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்க வேண்டுமென சிபாரிசு செய்துள்ளேன். இருப்பினும் நியமனங்கள் தொடர்பான விவரங்கள் எனக்கு அறிவிக்கப்படவில்லை. நியமனங்கள் 2002 ஆம் ஆண்டில் வழங்கப்படும் என்பதற்கு உறுதி வழங்குகிறேன். ஆனால யாழ்.மாவட்டத்தில் எவ்வளவு தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படும், எந்த அளவில் வழங்கப்படும் என்பது பற்றி தீர்மானிக்கப்படவில்லை. தொண்டர் ஆசிரியர்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றே கருதுகின்றேன். எனவே அவர்கள் மறியற் போராட்டத்தை கைவிடும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

# நேற்று இரண்டாவது நாளாக உதவிக் கணக்காய்வாளர் மறியல்

## கூட்டுறவுத் திணைக்களம் முன்பாக

கூட்டுறவுத் திணைக்கள உதவிக் கணக்காய்வாளர்களின் மறியற் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் இடம்பெற்றது. இதன் காரணமாகக் கூட்டுறவுத் திணைக்களத்தின் அன்றாட செயற்பாடுகள் பாதிப்படைந்தன.

தமது சேவைக்காலத்தைக் கவனத்தில் கொண்டு தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி உதவிக் கணக்காய்வாளர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கூட்டுறவுத் திணைக்களத்தின் முன்பாகத் தொடர்ச்சியான மறியற் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் மே தினத்தையொட்டி இடைநிறுத்தப்பட்ட போராட்டம் நேற்று மீண்டும் இடம்பெற்றது.

இன்று 3 ஆவது நாளாகவும் தமது போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, தமிழர் கூட்டமைப்பின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, கணக்காய்வாளர் தரப்பின் இரு பிரதிநிதிகளை வடக்கு - கிழக்கு மாகாண சபை கூட்டுறவுத் திணைக்கள ஆணையாளர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்த வரும்படி அழைப்பு விடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-10-86)

## கற்கை வசதி குறைவு:

# சித்த மருத்துவ மாணவர்கள் பகிஷ்கரிப்பில் குதித்தனர்

யாழ்ப்பாணம்,மே3

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்கள் நேற்று முதல் விரிவுரை பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமது பாடவிதானத்திலுள்ள உள்ளக நோயாளர் கற்கைநெறியினை மேற்கொள்ள முடியாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கற்கைநெறிக்கான வசதியை செய்து தருமாறு சித்த மருத்துவத்துறை மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரிடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் இவ்வசதிகள் மேற்கொள்ளப்படாததினால் இப்பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்ச்சியாக மேற்கொள்ளவுள்ளதாக மாணவர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-8)

# பலஸ்தீனத் தலைவர் மீதான இஸ்ரேலிய முற்றுகை நீக்கம்

## அலுவலகத்தை விட்டு அரபாத் வெளியேறினார்

ஜெருசலேம்,மே3

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் மீதான முற்றுகையை இஸ்ரே



லியப் படைகள் நேற்று வாபஸ் பெற்றன. இதனை அடுத்து ரமழாவில் கடந்த ஒருமாத காலத்திற்கும் மேலாக நீடித்த முற்றுகை நாடகம் ஒரு முடிவிற்கு வந்துள்ளது.

அமெரிக்காவின் சமரசத் திட்டத்தை இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டதையடுத்தே அரபாத் மீதான முற்றுகை விலக்கப்பட்டது.

அரபாத்தின் அலுவலகத்தை முற்றுகையிட்டிருந்த இஸ்ரேலியப் படைகள் நேற்று அதிகாலையிலேயே - இருள் சூழ்ந்திருந்த வேளையிலேயே - அங்கிருந்து வெளியேற ஆரம்பித்துவிட்டன.

அவர்கள் வெளியேறியதை அடுத்து நேற்றுக்காலை அந்த அலுவலகத்தை விட்டு அரபாத் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் சகிதம் வாகனத் தொடரணியில் வெளியேறிச் சென்றார்.

முன்னதாக இஸ்ரேலிய சுற்றுலாத்துறை அமைச்சர் ரெவ்ஹெம் ஸிவியின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்று இஸ்ரேல் குற்றஞ்சாட்டும் ஆறு பலஸ்தீனர்களை அமெரிக்க மற்றும் பிரிட்டனின் பாதுகாப்பில் வைப்பதற்கு பலஸ்தீனர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

அதன் அடிப்படையிலே அவர்கள் 6 பேரும் நேற்றுமுன்தினம் இரவு அமெரிக்கர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து இஸ்ரேலிய முற்றுகை விலக்கப்பட்டது.

முற்றுகை நீக்கப்பட்டு அரபாத் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டது குறித்து அவரது மெய்ப் பாதுகாவலர்களும் ஆதரவாளர்களும் பெரும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இதேவேளை -

இஸ்ரேல், பலஸ்தீன நகரான துல்கரத்தில் தனது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் அந்த நகருக்குள் புகுந்த இஸ்ரேலியர்கள் அங்கு கண்மூடித்தனமாகப் பலஸ்தீனர்களைக் கைது செய்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)



முற்றுகை நீக்கப்பட்டது குறித்து தமது மகிழ்ச்சியைக் கொண்டாடும் பலஸ்தீனத் தலைவரின் மெய்ப்பாதுகாவலர்கள்.

# இளவரசி டயானாவின் கடிதங்கள் ஏலத்தில்!

லொஸ்ஏஞ்சல்ஸ்,மே3

பிரிட்டனின் முன்னாள் இளவரசியும் கார்விபத்தில் உயிரிழந்தவருமான டயானா, தனது காதலர் ஒருவருக்கு எழுதிய கடிதங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

டயானா தனது குதிரையேற்றப் பயிற்சியாளர் ஜேம்ஸ் ஹெவிட், டோடி அல்பயத் ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த விடயம் தெரிந்ததே.

ஆனால், ஸ்ரீபன் குவிக் என்னும் மருத்துவ உதவியாளருடன் டயானா நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாகக் கலிபோர்னியாவைச் சேர்ந்த 'ஒடிசி அக்ஷன்ஸ்' என்ற ஏல நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டுவரை ஸ்ரீபன் டுவிக், டயானாவின் மருத்துவ உதவியாளராக இருந்துள்ளார். அப்போது அவருக்கு டயானா 11 வாழ்த்து அட்டைகள், 4 கடிதங்கள் என்பவற்றை அனுப்பியுள்ளார்.

டயானா தன் கைப்படவே எழுதிய அந்தக் கடிதங்களில் தனது காதலை அவர் மறைமுகமாகச் சொல்லியுள்ளார் என்கிறது 'ஒடிசி அக்ஷென்ஸ்' நிறுவனம்.

இந்தக் கடிதங்களை அந்த நிறுவனம் அடுத்தமாதம் இன்ரநெற் மூலம ஏலம் விடவுள்ளது. (ம)

# பாகிஸ்தானில் நேற்று இரு குண்டு வெடிப்புகள்

பாகிஸ்தானின் வர்த்தகத் தலைநகரான கராச்சியில் நேற்று இரு வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்கள இடம்பெற்றுள்ளன. இவற்றில் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டான்; 5 பேர் காயமடைந்தனர்.

முதலாவது குண்டு கடைத் தொகுதி நிறைந்த நகரின் மத்தியில் வெடித்தது. இதிலேயே சிறுவன் பலியானான்; மற்றும் ஐவர் காயமடைந்தனர்.

அடுத்த குண்டு கராச்சியின் மற்றுமொரு சந்தைப் பகுதியில் இடம்பெற்றது. இதில் அங்கு நின்ற சில கார்கள் சேதமடைந்தன.

"இது திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல். காலையில் மக்கள் கூடுவதற்கு முன்பே குண்டு வெடித்துவிட்டதால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. ஆனால் இது ஒரு வித பதற்றத்தை இங்கு ஏற்படுத்தியுள்ளது" - என்றார் பொலீஸ் அதிகாரியான முனீர் ஷேக்.

இந்தச் சம்பவங்களை அடுத்து கராச்சியில் அமைதியை ஏற்படுத்துவதற்காக இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் நீண்ட காலமாக ஷியா மற்றும் சுனி இன முஸ்லிம்களிடையே நடந்து வரும் மோதல்களே இந்தக் குண்டு வெடிப்புகளுக்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# பிலிப்பைன்ஸ் விமான விபத்தில் விமானி பலி; 16 பேருக்கு காயம்

மணிலா,மே.3

பிலிப்பைன்ஸில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த விமானப்படை ஜெட் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி பாடசாலை ஒன்றின் மீது வீழ்ந்து நொறுங்கியதில் விமானி உயிரிழந்தார்; 16 பேர் காயமடைந்தனர்.

வடக்கு மணிலாவின் மபலகட் நகரில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றது.

பிலிப்பைன்ஸில் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராட, அமெரிக்க இராணுவம் பிலிப்பைன்ஸ படையினருக்குப் பயிற்சி அளித்து வருகின்றது. இந்தப் பயிற்சியின் போதே விமான விபத்து இடம்பெற்றது.

விமானம் விபத்துக்குள்ளாகி பாடசாலையின் மீது விழுந்ததனாலேயே 16 பேரும் காயமடைந்தனர்.

விபத்துக்குள்ளான உடனேயே விமானி விமானத்திலிருந்து வெளியேற முயன்றார். எனினும் அதற்கிடையில் விமானம் வெடித்துச் சிதறி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



விமானச் சிதைவுகளிடையே தேடுதல் நடத்தும் அதிகாரிகள்.

# கனடாவிலும் அல்கெய்டா

வான்கோவர்,மே3

பின்லேடனின் அல்கெய்டா அமைப்பு கனடாவிலும் செயற்பட்டு வருவதாக அந்த நாட்டின் புலனாய்வுத்துறையினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

லிபியா, அல்ஜீரியா, எகிப்து, சோமாலியா ஆகிய நாடுகளில் இருந்து கனடாவில் குடியேறி இருக்கும் சுனிப்பிரிவு முஸ்லிம்களில் ஒரு பகுதியினரின் ஆதரவுடன் இவர்கள் கனடாவில் செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களால் அமெரிக்காவுக்கு மீண்டும் ஆபத்து ஏற்படலாம் என்பதனால் இவர்களைத் தேடும்பணி கனடாவில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

எல்லா நாடுகளில் இருந்தும் மக்கள் கனடாவில் குடியேறுவதால் தீவிரவாத அமைப்புகளும் ஊடுருவுவதை தடுக்கமுடியாதுள்ளதாக கனேடிய புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் வார்ட் எல்காக் தெரிவித்தார்.

தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோரை சிறிய வீடியோக்கள் மற்றும் ஸ்கானர்கள் மூலம் பின்தொடரும் புலனாய்வுத் துறையினர், அவர்களைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ம)

## ஆங் ஷான் சூகி ஓரிரு தினங்களில் விடுதலையாவார்!

ரங்கூன்,மே.3

மியான்மரில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவி ஆங் ஷான் சூகி இன்னும் ஓரிர தினங்களில் விடுதலை செய்யப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேசிய ஜனநாயக முன்னணி



யின் பிரதித் தலைவரான ரின் ஓ நேற்று இதனைத் தெரிவித்தார்.

"ஆங் ஷானின் 20 வருட வீட்டுக் காவல் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான கடைசி நேரப் பணிகள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றன" - என்று அவர் கூறினார்.

ஆனால் ஆங் ஷான் சூகியை சில முன்நிபந்தனைகளுடனேயே இராணுவ அரசு விடுவிக்க முன் வந்துள்ளதாக அவரது கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர் தெரிவித்தனர். (ம)

## அல்கெய்டாவுக்கு எதிராக

# ஆப்கானில் பிரிட்டன் படை நடவடிக்கை

காபூல்,மே3



கிழக்கு ஆப்கான் மலைத் தொடர்களில் தேடுதல்களில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் படையினர்.

ஆப்கானிஸ்தானில் இன்னும் மறைந்து கொண்டுள்ள அல்கெய்டா தீவிரவாதிகளை தேடிக்கண்டு பிடித்துக் கைது செய்வது அல்லது அழிப்பது என்ற நோக்குடன் அங்குள்ள பிரிட்டிஷ் துருப்பினர் நாட்டின் கிழக்கு மலைத் தொடர்களில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஆப்கானில் உள்ள பிரிட்டிஷ் துருப்பினரின் பேச்சாளரான பிரிகேடியர் ரொகர்லேன் இத்தகைய இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தினார். இந்த இராணுவ நடவடிக்கைக்கு 'ஒப்பரேஷன் சினைப்' (Operation Snipe) என்று பெயரிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

"இந்த நடவடிக்கை ஆப்கானிஸ்தானில் புற்றுநோய் போன்று புரையோடிப்போயிருக்கும் அல்கெய்டா அமைப்பை முற்றாகத் துடைத் தழிக்கும்" - என்று பிரிகேடியர் மேலும் சொன்னார்.

'ஒப்பரேஷன் சினைப்' ஆரம்பிக்கப்பட்டு நான்கு நாள்கள் ஆகிவிட்டன. எனினும் இதுவரை அல்கெய்டா தீவிரவாதிகளுக்கும் பிரிட்டிஷ் படையினருக்கும் இடையே மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை.

இந்தப் படை நடவடிக்கையில் 45 விசேட கொமாண்டோக்கள் உட்பட சுமார் ஆயிரம் பிரிட்டிஷ் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ம)

## இராணுவ அதிகாரிகள் உயிரிழப்பு

டுனிஸ்,மே3

டுனிஸியா நாட்டில் ஏற்பட்ட ஹெலி விபத்தில் அந்த நாட்டின் இராணுவ உயர் அதிகாரி உட்பட 13படை அதிகாரிகள் உயிரிழந்தனர்.

தலைநகர் டுனிஸில் இருந்து 60 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் மெட்ஜிஸ் லிப் என்ற இடத்தில் இந்த விபத்து இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இராணுவத்தின் பிரதம கட்டளை அதிகாரியான பிரிகேடியர் ஜெனரல் அப்டிலாஸி ஸிக் உட்பட இராணுவத்தின் மிக முக்கிய அதிகாரிகள் 12பேரும் உயிரிழந்தனர்.

உலக அரங்கில்

# சீர்திருத்தப் பத்திரிகையாளருக்கு ஈரானில் 23 மாத சிறைத்தண்டனை

தெஹ்ரான்,மே3

ஈரானில் அரச மற்றும் அரச அதிகாரிகளுக்கு எதிராக அவதூறுப் பிரசாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் சீர்திருத்த ஆதரவுப் பத்திரிகையாளர் ஒருவருக்கு 23மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அஹமட் செய்ட் அபாடி என்ற இந்தப் பத்திரிகையாளருக்கு ஈரானிய இஸ்லாமிய அடிப்படைவாத நீதிமன்றம் இந்தத் தண்டனையை விதித்துள்ளது.



அஹமட் செய்ட் அபாடி

பத்திரிகையாளர் அஹமட் செய்ட் அபாடி சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் 7மாதங்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தார்.

அமெரிக்காவினுடைய அழுத்தங்கள் காரணமாக ஈரானிய தலைமைத்துவத்திலுள்ள அடிப்படைவாதிகள், கருத்து முரண்பாடானவர்களைச் சகித்துக் கொள்ளவேண்டிய ஒரு நிலைப்பாட்டினை கையாளுவதாக அபாடி குற்றஞ்சாட்டியிருந்தார்.

கடந்த சில மாதங்களில், ஈரானிய அடிப்படைவாத நீதிமன்றங்கள், சிறையிலிருந்த சீர்திருத்தவாதிகளை விடுவித்தபோதும் மேலும் அதிக எண்ணிக்கையிலான சீர்திருத்தவாதிகளை சிறையில் அடைத்து வருகின்றன.

சமீபத்தில் சுமார் 60சீர்திருத்தவாதிகள் இஸ்லாமிய ஆட்சி முறையை மாற்றச் சதித்திட்டம் தீட்டிய குற்றத்திற்காகத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர்.

ஈரானில் மன்னர் ஷா ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் இஸ்லாமிய மதத் தலைவர் அயதுல்லா கொமேனி தலைமையில் தீவிர இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் செல்வாக்குப் பெற்ற அரசு அமைக்கப்பட்டது. தற்போது இஸ்லாமிய சீர்திருத்தவாதிகள் முற்போக்கான அரசமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கூறிவருகிறார்கள். இந்த நிலையில் அடிப்படைவாதிகளுக்கும், சீர்திருத்த வாதிகளுக்கும் இடையே கொள்கை ரீதியான முரண்பாடுகள் ஈரானில் நிலவிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# ஜனநாயக வழிமுறையில் பிரபாகரன் எவ்வாறு முகம்கொடுக்கப் போகிறார்?

**பத்திரிகையாளர் மாநாட்டில் பிரபாகரன் வழங்கிய பதில்கள் நன்மையானவையாகவோ அல்லது தீமையானவையாகவோ இருக்கலாம். இருப்பினும் அந்த மட்டத்திலான பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் றோஹண விஜேவீர, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அல்லது பிரதமர் ரனில் விக்கிரமசிங்க போன்ற தலைவர்கள் கூடக் கலந்துகொள்ளவில்லை என்கிறார் "ராவய" பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன். "ராவய" வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

பிரபாகரன் பத்திரிகையாளர் மாநாட்டில தெரிவித்த கருத்துக்களை பூரணமாகக் கவனத்திற்கொள்ளாமல், ஒன்றிரண்டு விடயங்களை மாத்திரம் தேர்ந்தெடுத்து தற்போது பிரபாகரனுக்கு 'ஈழம்' வழங்கப்பட்டுவிட்டதாகக் கடுங்கோட்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இந்தக் கருத்தைக் கொண்டவர்களுக்கு ஜே.வி.பி.தலைமை வகிக்கிறது. சிங்கள இனவாதிகளும் இந்தக் கருத்துக்களால் போஷிக்கப்பட்டு வருகின்றனர்.

நீண்டகாலமாக வனவாசத்தை மேற்கொண்டு, தனிநாடு கோரி, ஆயுதம் தரித்து தீவிர போர்களில் ஈடுபட்ட ஓர் அமைப்பு, பேச்சுக்களின் மூலம் தீர்வினைக்காண இணக்கம் தெரிவித்தவுடனேயே அந்த அமைப்பு கொண்டிருந்த அபிலாஷைகள் அனைத்தையும் கைவிடும் என எதிர்பார்க்க முடியாது.

அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் ஒன்றுக்கு ஒன்று வித்தியாசமான மூன்று சக்திகளுக்கு பிரபாகரன் பதிலளிக்க நேரிட்டது. தான் அந்த மாநாட்டில் தெரிவிக்கும் கருத்துக்களை சர்வதேச சமூகத்தினர் சிறிலங்கா அரசாங்கத்தினர் உட்பட சிங்கள சமூகத்தினர் மற்றும் தனது போராளிகள் உட்பட தமிழ் மக்கள் ஆகியோர் அவதானித்துக்கொண்டிருப்பர் என்பதைப் பிரபாகரன் அறிவார். தான் அதுவரை கொண்டிருந்த குறிக்கோள்களைக் கைவிட்டு - ஒரு தேசத் துரோகியாகத் தனது போராளிகள் மற்றும் தமிழ் மக்களின் முன்னால் பிரபாகரனால் முன்னிற்க முடியாது.

மறுபுறத்தில் தான் சமாதானத் தர்வுக்குத் தயாரில்லாதவர் - ஆயுதப் போராட்டத்தில் மட்டுமே நம்பிக்கை கொண்டு செயற்படும் அடிதடிகாரன் என்ற தோற்றத்துடன் சர்வதேச சமூகம் சிறிலங்கா அரசு மற்றும் சிங்கள மக்களின் முன்னால் பிரபாகரனால் முன்னற்க முடியாது. எனவே ஒரு புறத்தில் தனது போராளிகள் மற்றும் இனத்தின் உரிமைகளுக்காக மேற்கொள்ளும் போராட்டத்தைக் கைவிட முடியாதவராகவும், மறுபுறத்தில் உலகில் உருவாகிவரும் புதிய மாற்றங்களுக்கு அமைய சமாதானத் தீர்வுக்குத் தயாராய் இருப்பவராக சர்வதேச சமூகம், சிறிலங்கா அரசு மற்றும் சிங்கள மக்கள் முன்னிலையில் தோற்றமளிக்கவும் அவருக்கு நேரிட்டுள்ளது.

இதில் உள்ள இடைவெளியின்

அல்லது ஒன்றுக்கொன்று வித்தியாசமான நிலைவரத்தின் ஒரு பக்கத்தை மாத்திரமே பார்க்கும் தீவிரவாதக் கருத்துடைய சிங்களச் சக்திகளுக்கு ஈழத்தை அடையும் நோக்கத்தைக் கைவிடாத அடிதடிகாரனாகவே பிரபாகரன் தோற்றமளிக்கக்கூடும்.

அந்த வித்தியாசத்தின் மறுபுறத்தைக் காணும் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு ஈழக் குறிக்கோளைக் கைவிட்ட துரோகியாகவே பிரபாகரன் தோற்றமளிக்கக் கூடும்.

### சிக்கலான சந்திப்பு

வெளியாரின் நேரடித் தொடர்புகளற்ற நிலையில் இருந்த பிரபாகரன் பகிரங்கமாக செய்தியாளர்கள் மாநாட்டில் கலந்துகொண்டதையே நல்ல விடயமாகக் கவனத்திற்கொள்ளலாம். அது பிரபாகரன் விரும்பிய பத்திரிகையாளர்களுக்காக மட்டுமே நடத்தப்பட்ட மாநாடு அல்ல.

விடுதலைப் புலிகளைக் கடுமையாக எதிர்க்கும் - கடுமையாக விமர்சிக்கும் செய்தியாளர்கள் பலர் அந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். அங்கு எழுப்பப்பட்ட வினாக்கள் மிகவும் இலகுவானவை என்றோ சிக்கல்கள் அற்றன என்றோ கருதமுடியாது.

அந்தக் கேள்விகளுக்குப் பிரபாகரன் அளித்த பதில்கள் நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ இருக்கலாம். ஆனால் அவ்வாறான தரத்தில் அமைந்த ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை றோஹண விஜயவீர, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அல்லது பிரதமர் ரணில் விகிரமசிங்க போன்ற தலைவர்கள் கூட நடத்தியது கிடையாது.

ஜே.வி.பியின் தலைவர் சிறிலங்காவுக்கு வருகைதந்த வேளையில் கொழும்பிலுள்ள நிப்பொன் ஹோட்டலில் பத்திரிகையாளர்கள் மாநாடு நடைபெறுவதாக இருந்தது. ஆனால் ஜே.வி.பியினர் விரும்பாத பத்திரிகையாளர்களும் அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டிற்குச் சென்றிருந்தனர். ஜே.வி.பியினர் ஒரு தந்திரத்தைக் கையாண்டனர். தாங்கள் விரும்பாத பத்திரிகையாளர்களை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, தாங்கள் விரும்பும் பத்திரிகையாளர்களை மாத்திரம் ஒரு சுற்றுலா பஸ்ஸில் ஏற்றித் திடீரென ஒழுங்கு செய்யப்பட்ட வேறு ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

கடந்தகாலங்களில் ஜனாதிபதி சந்திரிகா நடத்திய பத்திரிகையாளர் மாநாடுகளில் ஜனாதிபதியிடம் சிக்கலான கேள்விகளை எழுப்பக்கூடும் எனக் கருதப்படும் பத்திரிகையாளர்களுக்கு அவற்றில் பங்குபற்ற இடமளிக்கப்படவில்லை.

இந்நோக்கில் பார்க்கும்போது பிரபாகரனின் இந்த பத்திரிகையாளர்களின் மாநாடானது பிரபாகரன் என்ற பாத்திரத்தை நன்கு உரைத்துப் பாக்கக் கிடைத்த சந்தர்ப்பமாகக் கருத முடியும்.

அந்த மாநாட்டில் தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பிரபாகரன் பதிலளித்த விதத்தை மிகவும் சிறப்பானது எனக் கூறமுடியாவிடினும் அந்த மாநாட்டில் பங்குகொண்டதானது அவருக்குக் கிடைத்த வெற்றி எனக் கருதமுடியும்.

### புதிய அனுபவம்

அது பிரபாகரனைப் போலவே அவரது போராளிகளுக்கும் ஒரு புதிய அனுபவமாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பிரபாகரன் கட்டி வளர்த்த அரசியல் கலாசாரத்திற்கேற்ப அவரது போராளிகள் எவருக்கும் அச்சமின்றி அவருக்கு முன்னால் கேள்வி கேட்கும் நிலை இருந்ததில்லை. தங்கள் தலைவன்மீது தங்களைப்போல் மரியாதை செலுத்தாமல் பத்திரிகையாளர்கள் விரல் நீட்டியவாறு தொடர்ந்தும் வினாக்களை எழுப்பியது அவரது போராளிகளுக்கு மாத்திரமன்றி பிரபாகரனுக்கும் ஒரு புதிய அனுபவமாக அமைந்தது.

அந்தப் பத்திரிகையாளர் மாநாடு பிரபாகரன் குறித்து புதிய எண்ணங்கள் எமக்கு உருவாகக் காரணமாக அமைந்ததுபோலவே அவரது போராளிகள் மற்றும் தமிழ் மக்களிடையே அவர் குறித்த நல்ல - தீய, திறமை-திறமையீனம் ஆகியன குறித்து புதிய எண்ணங்கள் உருவாகக் காரணமாக அமையலாம்.

ஜனநாயகம் பற்றிய முதலாவது பாடம் அதாவது காடுகளில் தங்கியிருந்து ஆயுதப் போராட்டங்களை மேற்கொள்வதிலும் பார்க்க நாகரிகத்தில் ஒன்றிணைவது அதாவது பிரதான நீரோட்டத்தில் கலந்துகொண்டு வாழ்வது எவ்வளவு தூரம் கடினமானதும் சிக்கலானதும் என்பதைப் பத்திரிகையாளர் மாநாட்டின்மூலம் பிரபாகரனும் அதேபோல அவரது போராளிகளும் ஓரளவிற்கேனும் உணர்ந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

எந்தவோர் ஆயுதம் தரித்த அரசியல் அமைப்பும் தாங்கள் விடும் தவறுகளுக்கு நியாயம் கற்பிக்கும் நோக்குடனேயே பெரும்பாலும் செயற்படுகின்றன. ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொண்ட பின்னரும் ஜே.வி.பியினர் இரண்டாவது கிளர்ச்சியின்போது விட்ட தவறுகளுக்கு நியாயம் கற்பித்தனரேயன்றி அவை குறித்துக் கவலைகொள்ளவில்லை. சுமார் 60 ஆயிரம் எம்மவர்கள் கொல்லப்பட்டதால் ஆறாயிரம்பேரை



நாங்களும் கொல்ல நேரிட்டது என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்திருந்தார்.

ஆனால், பிரபாகரன் இந்த மாநாட்டில் தங்கள் கைகளினால் இடம்பெற்ற தவறுகளுக்கு நியாயம் கற்பிக்கும் வழிமுறைகளைப் பின்பற்றுவதற்குப் பதிலாக அவற்றை துன்பியல் நிகழ்வுகளாகக் கருதி, அவற்றிற்காக வருந்துவதாகக் கூறித் தனது உயர்நிலையான தோற்றத்தை வெளிப்படுத்தினார். அதை அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் பிரபாகரன் வெளியிட்ட சிறப்பு அம்சம் எனக் கருதலாம்.

### நிரந்தர எதிரிகள் இல்லை

ராஜீவ் காந்தி படுகொலைக்கு பிரபாகரனே பொறுப்பு எனவும், எனவே இந்தியா ஒருபோதும் பிரபாகரனை மன்னிக்காது எனவும் ஜே.வி.பி கருதுகிறது. இருப்பினும் எப்போதும் அனைத்தும் ஒரே விதமாக அமைவதில்லை. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கணவரான விஜயகுமாரணதுங்கவை படுகொலை செய்தவர்கள் ஜே.வி.பியினர். ஆயினும் ஜே.வி.பியினரும் சந்திரிகாவும் நிரந்தரமாக எதிரிகளாக விளங்கவில்லை. தற்போது அந்த இருதரப்பாரும் அந்த விடயத்தை மறந்து ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைப்பை வழங்கிச் செயற்பட்டு வருகின்றனர். இது ஏன் மற்றவர்களுக்கும் பொருந்தாது?

விடுதலைப் புலிகளால் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் ராஜீவ்காந்தி சிறிலங்கா வந்திருந்தபோது ஜே.வி.பியின் ஆதரவாளரின் (கடற்படைச் சிப்பாய்) துப்பாக்கிப் பிடியினால் ராஜீவ் காந்தியைக் கொலைசெய்ய முயற்சித்த சம்பவத்தை நாம் மறந்துவிட முடியாது. அந்தக் கொலை முயற்சியை மேற்கொண்டவர் தேசியவீரர் எனக் கருதப்பட்டதுடன் ஜே.வி.பியினர் அவருக்கு அவ்வேளையில் கௌரவம் அளித்தனர்.

துப்பாக்கிப் பிடியினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக அந்த நேரத்தில் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டிருந்தால் ராஜீவ்காந்தியைப் படுகொலை செய்த குற்றச்சாட்டு விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்பட்டிருக்காது. பதிலாக ஜே.வி.பியினர்மீதே சுமத்தப்பட்டிருக்கும்.

எந்தவோர் ஆயுதமேந்திய அமைப்பும் யுத்தத்தின்மூலம் இறுதித் தோல்வியைச் சந்திக்காது. பேச்சு மேசைக்கு அழைக்கப்படும்போது அந்த அமைப்பு தமது உரிமைகளுக்காக கடுமையான நிபந்தனைகளை முன்வைப்பதைத் தடுத்து நிறுத்த முடியாது.

ஜே.வி.பியினரால் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கிளர்ச்சியானது யுத்த ரதியாக முற்றாகத் தோற்கடிக்கப்பட்ட நிலையிலேயே நிபந்தனை அற்ற விதத்தில் ஜே.வி.பியினர் ஜனநாயக வழிக்கு வந்தனர். அதற்கு முன்னர் 1988 ஜனாதிபதி தேர்தலின் போது ஜே.வி.பியினர் கூட ஆயுதங்களைக் கீழே வைக்காமல், ஜனாதிபதித் தேர்தலுக்கு தங்களது ஒத்துழைபபுத் தேவையெனில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ரத்துச் செய்யும்படியும் நாடாளுமன்றத்தைக் கலைத்து, தங்களையும் சேர்த்து, காபந்து அரசை அமைத்து, ஜனாதிபதி தேர்தலலை நடத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஜே.வி.பியினரின் அந்தக் கோரிக்கை ஏன் விடுதலைப் புலிகளுக்கும் பொருந்தாது?

### ஆயுதக் கையளிப்பு விவகாரம்

ஒரு புறத்தில் யுத்த ரீதியாகத் தோற்கடிக்கப்படாத ஆயுதம் தாங்கிய அமைப்பு ஒன்று சமாதானப் பேச்சுக்கு இணங்கிய உடனேயே தங்கள் வசமுள்ள ஆயுதங்களைக் கையளிக்கும் தீர்மானத்திற்கு வரமாட்டாது.

தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் தேர்தலைச் சந்தித்து, தங்களுக்குச் சார்பான அரசு அமைக்கப்பட்ட பின்னரே ஆயுதங்களைக் கையளித்தது. அயர்லாந்தில் சிவப்பு இராணுவம் சமாதானப் பேச்சுக்களுக்கு இணங்கி - மேற்கொள்ளப்பட்ட தீர்வு இணக்கத்திற்கு - அமைய நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை அவதானித்து - அதில் திருப்தி கொண்ட பின்னரே - மிக அண்மையிலேயே ஆயுதங்களைக் கையளித்தது.

### பிரபாவே தலைவர்

எந்தவொரு நாட்டிலும் அரசுக்கு எதிராக ஆயுதமேந்திய அமைப்பு எதையும் அந்நாட்டின் அரசமைப்பை ஏற்றுக்கொள்ளாமல் செயற்படும் அமைப்பு என்றே கருத வேண்டும். நடைமுறையில் உள்ள அரசமைப்பு வரையறைக்குள் தங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாத - நிராகரிக்கப்படும் - நிலை உருவாகும் வேளையிலேயே தாங்கள் விரும்பும் அரசியல் வரையறையை உருவாக்கும் நோக்கில் எந்தவோர் அமைப்பும் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் எந்தவோர் அமைப்பும் அரசியல் அமைப்பு ரீதியாக அந்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரையோ அல்லது ஜனாதிபதியையோ தங்கள் நாட்டின் தலைவர்கள் எனக் கருதுவதில்லை. தங்களது தலைவரையே அந்தவமைப்பு பிரதமராகவோ ஜனாதிபதியாகவோ கருதுகிறது.

ஜே.வி.பியும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் தமது நாட்டின் தலைவராக ஜே.ஆர்.ஜயவர்த்தனாவைக் கருதவிலலை. பதிலாக றோஹண விஜேவீரவையே நாட்டின் தலைவராகக் கருதியது. தமிழீழத்தின் பிரதமரும் ஜனாதிபதியும் பிரபாகரனே என அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த கருத்தையும் அந்த அடிப்படையிலேயே கவனத்திற்கொள்ளவேண்டும்.

தற்போது விடுதலைப் புலிகள் நடைமுறையில் உள்ள அரசமைப்பு வரையறைக்கு வெளியே உள்ளனர். அவர்கள் இந்த அரசமைப்பு வரையறைகளை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு வரும்வரை அல்லது அவர்கள் ஏற்றுக்கொள்ளும் புதிய அரசமைப்பு முறை அறிமுகப்படுத்தப்படும் வரை அவர்கள் தங்கள் நாட்டின் தலைவராகப் பிரபாகரனையே கருதுவர்.

இதுவரை விடுதலைப்புலிகள் நாட்டின் சட்டதிட்டங்களுடன் பரிச்சயப்பட்டவர்கள் அல்லர். விடுதலைப் புலிகள் அமைப்பின் சட்டதிட்டங்களுக்கே பழக்கப்பட்டவர்கள்.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஓர் அமைப்பு ஜனநாயக வழியில் அமைக்கப்பட்ட அமைப்பில் (கட்சியில்) காணமுடியாத விசேட அரசியல் கலாசாரத்தைக் கொண்டிருக்கும். ஜனநாயகக் கருததுக்களுக்குப் புறம்பாக - உயர் மட்டத்திலிருந்து வரும் கட்டளைகளுக்கு வினாவெழுப்பாது செயற்படுவது அவ்வாறான அமைப்புகளில் காணப்படும் விசேட அம்சமாகும்.

ஆயுதம்தரித்த அமைப்பாகப் பலகாலம் செயற்பட்டு, பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் கலக்கும் அமைப்பு ஒன்று தாங்கள் பழகிய, பழக்கப்பட்ட முன்னைய பழக்கவழக்கங்களை உடனேயே கைவிடும் என எதிர்பார்க்க முடியாது. இது மெதுமெதுவாகவும் - படிப்படியாகவுமே இடம்பெறும். இது விடுதலைப் புலிகள் அமைப்புக்கு மாத்திரமன்றி ஜே.வி.பிக்கும் பொருத்தமான தர்மமாகும்.

ஜே.வி.பி. ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த வேளையில், 1988 ஜனாதிபதித் தேர்தல் அண்மித்தபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் பல அரசியற்கட்சிகளுடன் ஜே.வி.பியும் கூட்டுச்சேர்ந்தது. ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்ததால் ஜனாதிபதித் தேர்தலின்போது எவ்வித இடையூறுகளுமின்றிச் செயற்படலாம் என சுதந்திரக் கட்சி எதிர்பார்த்தது.

ஆனால், ஜே.வி.பியின் எண்ணம்

**தமிழில்: கஜனி**

வேறாக இருந்தது. அதாவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஜனாதிபதித் தேர்தலில பங்குபற்றாமல் தடுப்பதே அவர்களது நோக்கமாகும். ஜே.வி.பியினால் விதிக்கப்பட்ட தடையை உதாசீனம் செய்து, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்தபோது ஜே.வி.பி அதுவரை ஐ.தே.கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகளுக்கு எதிராக மேற்கொண்ட யுத்தத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எதிரான யுத்தமான அமைத்துக் கொண்டது.

விடுதலைப் போராட்டத்தை நடத்துவது தாங்களே எனவும், தங்களின் சொற்படியே தங்களுடன் இணைந்துள்ள ஏனைய அரசியற் கட்சிகளும் செயற்பட வேண்டும் என்பதுமே ஆயுதப் போராட்டங்களில் ஈடுபடும் அனைத்து அமைப்புகளினதும் பொதுவான கருத்தாகும். இந்த

(9 ஆம் பக்கம் பார்க்க)

**யுத்தத்தை மேற்கொள்வதிலும் பார்க்க மக்களின் துயர்துடைக்கும் பணி கடினம்**

# உதயன்

## மேதின நிகழ்வுகள் போதிக்கும் பாடங்கள்

நேற்றுமுன்தினம் நாடு முழுவதிலும் கொண்டாடப்பட்ட மே தினம், பல்வேறு பாடங்களை பல தரப்புக்கும் போதித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜே.வி.பியைத் தவிர, ஏனைய கட்சிகள் அனைத்தும் நடத்திய மேதினப் பேரணிகளும், பொதுக் கூட்டங்களும் சமாதானத்துக்கும் அமைதிக்கும் அறைகூவல் விடுக்கத் தவறவில்லை.

ஜே.வி.பி. மட்டும் ஈழத் தமிழர்களை - அவர்களின் விடுதலைக்கான போராட்டத்தை - ஆயுதமுனையில் அடக்குவதன்மூலம் சமாதானத்தை எட்டலாம் என்ற சாரப்படத் தனது மேதினப் பிரகடனத்தை வெளிப்படுத்தியது.

ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது அணியினரும் அப்புத்தளையில் நடத்திய மேதினக் கூட்டத்தில் தற்போதைய சமாதான முயற்சிகள் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகின.

தற்போதைய நடவடிக்கைகளை 'போலி சமாதான முயற்சிகள்' என்று வர்ணித்த ஜனாதிபதி சந்திரிகா, உண்மையான - நேர்மையான - சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அதற்குத் தானும் தனது கட்சியும் முழு ஆதரவு வழங்கத் தயார் என்று பிரகடனப்படுத்தினார்.

இதைத்தவிர, ஏனைய கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் அனைத்தும் நடத்திய மேதினக் கூட்டங்களும் பேரணிகளும் சமாதானத்திற்கான அமைதி முயற்சியை ஒட்டுமொத்தமாக வலியுறுத்த - வரவேற்க - தவறவில்லை.

சிங்களப் பேரினவாத - தீவிரவாத - போக்குடைய ஜே.வி.பியும், 'சிஹல உறுமய', 'பூமி புத்ர' போன்ற ஒரு சில கட்சிகளுமே தற்போது சமாதானத்துக்கு எதிராகக் கூக்குரலிட்டு வருகின்றன.

மக்கள் ஆதரவுபெற்ற கட்சிகள் அனைத்தும் பெரும்பாலும் சமாதான முயற்சிகளை ஒரேயடியாக வரவேற்று நிற்கின்றன.

அதாவது - தற்போதைய நிலையில் - சமாதானத்துக்கு விரோதமான போக்குடைய கட்சிகளை - அணிகளை - மக்கள் ஏற்கத் தயாரில்லை என்ற யதார்த்தத்தை உணர்ந்த பெரும்பாலான கட்சிகள், மக்களின் அபிலாஷைகளை உணர்ந்து - தாம் அதை விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் - அதன்படி செயற்பட முயன்று வருகின்றன - வேறு வழியின்றி.

பல்வேறு கட்சிகளின் இப்போதைய போக்கும் செயற்பாடும் இதை வெளிப்படுத்தி நிற்கத் தவறவில்லை.

யாழ்ப்பாணத்தில் இம்முறை மே தினம் அதிகம் சோபிக்கவில்லை. மக்களும் அதிக அளவில் திரளவில்லை. இந்த மேதின ஏற்பாட்டுக்குத் துணையாக அரசியல் பக்கபலம் முழுமூச்சாகக் கொடுக்கப்படாததே எழுச்சிப் போக்கில் தொய்வு ஏற்பட்டதற்குக் காரணம் எனலாம்.

எது எப்படியாயினும் மக்கள் மனதில் தொய்வு ஏற்படாமல் பார்த்துக்கொள்வதும் -

தொய்வு ஏற்பட்டதற்கான காரணங்களைக் கண்டறிந்து உடனடியாக அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதும் -

சம்பந்தப்பட்ட - பொறுப்பான - தலைமைகளின் கடமை. அதற்கு மக்களின் மனதில் காணப்படும் ஆதங்கங்களை, அவர்களை உரிய முறையில் அனுகிப் படித்துக் கொள்வதும், அவை குறித்துத் திறந்த மனதோடு விவாதித்து, கருத்துப் பரிமாறிக் கொள்வதும் அவசியம். உரிய தலைமைகள் கவனித்துக் கொள்வது நல்லது.

இம்முறை ஊர்காவற்றுறையில் ஈ.பி.டி.பி. ஏற்பாட்டில் மே தினம் நடைபெற்றுள்ளது.

கடந்த ஓரிரு வருடங்களாக மேதின நிகழ்வுகளுக்காகவும் அதை ஒட்டி நடைபெறும் கலாசார, களியாட்ட விழாக்கள் மற்றும் இன்னிசை நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்காகவும் தீவகத்திலிருந்து யாழ்நகருககு பஸ்களில் ஏற்றி இறக்கப்படும் மக்கள் இம்முறை தீவகத்துக்குள்ளேயே அப்பணியில் ஈடுபட்டுக்கொண்டனர்.

தீவகத்தை முழு இராணுவப் பிரதேசம் என்றும், அங்கு புலிகள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் கடற்படை அறிவித்திருந்தது.

அதே இராணுவப் பிரதேசத்தில்தான் - கடற்படையின் கண்காணிப்புக்கு மத்தியில் - ஈ.பி.டி.பி. தனது அரசியல் நடவடிக்கையாக மேதினக் கூட்டத்தைச் சகல ஏற்பாடுகளுடனும் நடத்தி முடித்திருக்கின்றது.

தனது துணைப்படையாக இயங்கும் சில தமிழ்க் குழுக்களுக்கு தீவுப்பகுதி தொடர்ந்தும் சரணாலயமாக இருப்பதை உறுதிப்படுத்தவே அதனை முழு இராணுவப் பிரதேசம் என்றும், அங்கு புலிகள் அரசியல் பணிகளில் ஈடுபட அனுமதிக்க முடியாது என்றும் கடற்படை கூறி வருகிறது என இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அது இப்போது மேலும் ஊர்ஜிதமாகியிருக்கின்றது.

# குடாநாட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் சமூகவியல் துறையினர்!

## பாட அலகு மூலம் சமூகப்பணியைப் புரிகின்றனர்!

யாழ்ப்பாணம்,மே3

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறையினர் தமது பாட அலகாக சமூகப்பணி என்பதை இணைத்துள்ளதுடன் அதனை நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர்.

சமூகப்பணியினை மேற்கொள்வதுடன் சமூகத்தில் பின்தங்கிய மக்கள் வாழும் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அங்கு பல்வேறு மட்டத்தினரின் பிரச்சினைகளைக் கண்டறியும் முயற்சிகளையும் அவர்கள் மேற்கொண்டுவருகின்றனர்.

குறிப்பாகப் பின்தங்கிய மக்கள், வயோதிபர்கள், பெண்கள் முதலானோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிவதுடன் அவற்றைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

சமூகவியல் சமூகத்தினூடாக இயன்ற பொருள் உதவிகளும்கூட வழங்கப்படுகின்றன.

கடந்த மாதம் 27ஆம் திகதி நாவாந்துறை, குருநகர் (ஐந்துமாடி), சுன்னாகம் தெற்கு சபாபதிப்பிள்ளை வீதி முகாம் முதலான பகுதி மக்கள் மத்தியில் பல்வேறு விடயங்கள் சம்பந்தமான விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களை அவர்கள் நடத்தி உள்ளனர்.

தொடர்ந்தும் இவ்வாறு சமூகவியல் துறையினர் கிராமங்களுக்குச் சென்று சமூகப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இவ்வாறு சமூகவியல் கற்கையில் சமூகப்பணி ஓர் அலகாகக் கொண்டுவரப்பட்டு, மக்களுக்கு பல்வேறுவகையான சேவைகளை ஆற்ற மாணவர்களைத் தூண்டுவது பல்வேறு தரப்பினரிடையேயும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அத்துடன், பல்கலைக்கழக ரீதியில் சமூகப்பணி பாடத்திட்டத்தில் கொண்டுவரப்பட்டமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்தான் என்ற பெருமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகவியல் துறையினர் இந்தக் கல்வியினூடாக சமூகத்திடையே ஒற்றுமையை வளர்க்கவும், புரிந்துணர்வை வளர்க்கவும் தாம் எதிர்காலத்தில் சமூக சேவையாளர்களாக வருவதற்கும் வழிவகுக்கும் - என நம்புகின்றனர்.

சிரமதானம், நன்கொடை, முதலான சமூக சேவைகளை யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறையினர் அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் நிகழ்த்தி வருவதனையும் அவதானிக்க முடிகின்றது. (க-12)

## எதிர்க்கட்சித் தலைவர் - ஆயர் சந்திப்பு

கொழும்பு,மே3

அரசின் சமாதான முயற்சிகள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு மாவட்ட ஆயர் அதிவண.மார்க்கஸ் பெர்னாண்டோவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றியும் அப்போது ஆராயப்பட்டது.

சமாதான முயற்சிகளையும் புரிந்துணர்வு உடன்படிக்கையையும் தாம் ஆதரிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கொழும்பு ஆயரிடம் தெரிவித்தார். (க-4)

## நெடுந்தீவு அரச அதிபர் அலுவலகம் சில தினங்களாக இயங்கவில்லை!

யாழ்ப்பாணம்,மே3

நெடுந்தீவு உதவி அரச அதிபர் அலுவலகம் கடந்த சில நாள்களாகத் திறக்கப்படவில்லை.

அப்பிரதேசத்திலுள்ள சிலர் அங்கு பணிபுரியும் அரச அதிகாரிகளை அச்சுறுத்தி வருவதன் காரணமாகவே அலுவலகம் மூடப்பட்டுள்ளது.

காதல் விவகாரம் ஒன்றே அங்கு இத்தகைய பதற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளதாக அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் காதல் விவகாரத்தைத் தீர்ப்பதில் நெடுந்தீவு பிரதேச செயலக அலுவலர்களும் அப்பகுதி கிராம அலுவலரும் ஈடுபட்டனர். இதனால் ஆத்திரமடைந்த ஒரு குழுவினர் அந்தக் கிராம அலுவலரைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர். அவர் தற்போது நெடுந்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து உதவி அரச அதிபரின் பணிமனை பாதுகாப்புக் கருதி கடந்த இரு நாள்களாக மூடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலீஸாரிடம் முறையிட்டும் எவ்வித பலனும் ஏற்படவில்லை என்று கூறப்பட்டது.

தமது அதிகார எல்லைக்குள் இல்லையென்பதால் நெடுந்தீவுக்குத் தாம் வரமுடியாது என ஊர்காவற்றுறைப் பொலீஸார் கைவிரித்துவிட்டனர் எனக் கூறப்பட்டது. (ம-9)

## விரிவான தொழில்வாய்ப்புக் கொள்கை விரைவில் அறிமுகப்படுத்தப்படும்

### நகல் சட்டமூலத்தை கையேற்று பிரதமர் உரை

கொழும்பு,மே3

இளைஞர்,யுவதிகள் அறிவு, ஆற்றல் என்பவற்றை அதிகரிகக்கூடியவகையில் ஒரு விரிவான தொழில் வாய்ப்புக் கொள்கையை அரசு அறிமுகப்படுத்தவிருக்கிறது. - இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் தேசிய தொழில் வாய்ப்புக்கொள்கையின் நகல் சட்ட மூலத்தைக் கையேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொழில்,தொழில் வாய்ப்பு அமைச்சர் மஹிந்த சமரசிங்க இந்த சட்டமூலத்தை பிரதமரிடம் கையளித்தார்.

அங்கு பிரதமர் மேலும் கூறுகையில்-

பொருளாதார அபிவிருத்திக்கு தொழிலாளிகள் - முதலாளிமார் உறவுகளை மேம்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

நாட்டில் ஒரு தேசிய தொழில் வாய்ப்புக்கொள்கை இப்பொழுது தான் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதன்மூலம் ஒரு சீரான தொழில் வழங்கும் கொள்கை அமுல் படுத்தப்படும்.

உள்நாட்டிலும்,வெளிநாடுகளிலும் தொழில் புரியக்கூடியவர்களை உருவாக்குவது தான் அரசாங்கத்தின் கொள்கையாகும் - என்றார். (க-4)

### நாளை

சித்திரை 21
சனிக்கிழமை
(04.05.2002)
திதி : அட்டமி
பின்னிரவு 5.06 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
முற்பகல் 11.04 வரை
நடேசர் அபிஷேகம்
சுபநேரம் : 2.56 - 4.26
ராகுகாலம்: 8.56 - 10.26
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அன்புள்ள இதயம் இல்லாவிட்டால், நாம் நேர்மையானவர்களாக இருக்க முடியாது.

## தடுத்து வைக்கப்பட்ட வேளையில் பாதிப்பு ஏதும் ஏற்பட்டதா?

### இணையத்துடன் தொடர்புகொள்ளுங்கள்

பயங்கரவாத மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டோரில் ஏதாவது பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு 'உதவும் கரங்கள்' திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் உதவிகளை வழங்கவுள்ளது.

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட காலத்தில் உடல், உள மற்றும் தொழில் ரீதியாகப் பல தாக்கங்களை இவர்கள் சந்தித்துள்ளமையை அறியக்கூடியதாகவுள்ளது. இதனால் அவர்களுக்கு உதவுவதற்கான திட்டத்தை இணையம் முன்னெடுக்கவுள்ளது என்று அதன் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பாதிக்கப்பட்டோர் அல்லது அவர்களின் பெற்றோர், உறவினர்கள் இல. 28, கோயில் வீதியில் உள்ள யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையக் காரியாலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## மேலும் இரு தொழில் அதிகாரிகள் யாழ்.அலுவலகத்திற்கு நியமனம்?

யாழ்.தொழில் திணைக்களத்துக்கு விரைவில் மேலும் இரண்டு தொழில் அதிகாரிகள் நியமிக்கப்படவிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

12தொழில் அதிகாரிகள் யாழ்.தொழில் அலுவலகத்துக்கு தேவையாக இருந்த போதிலும் அண்மைக்காலங்களில் இருவர் மட்டுமே கடமையாற்றிவந்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ்ப்பணம் தொழில் திணைக்கள வட்டாரங்கள் பலதடவைகள் கொழும்பிலுள்ள தமது தலைமை அலுவலகத்துக்கும் தொழில் அமைச்சுக்கும் தெரியப்படுத்தி இருந்தன. அதைத் தொடர்ந்து மேலும் இருவரை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - யாழ்ப்பாணம் தொழில் திணைக்கள அலுவலகத்தை கணனி மயப்படுத்தி நவீன வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு தொழில் அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (க-4)

## முத்திரை வரி நீக்கம்

கொழும்பு,மே3

நேற்றுமுன்தினம் தொடக்கம் அரசாங்கத்தினால் முத்திரை வரி நீக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எந்தவொரு பத்திரம், உறுதி மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் போது அரசுக்கு முத்திரைவரி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

எனினும் மாகாண சபைகளுக்குச் செலுத்த வேண்டிய முத்திரைவரி தொடர்ந்தும் செலுத்தப்பட வேண்டும்.

இதேவேளை -

துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி வரி என்ற பெயரில் புதிய வரியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (க-4)

**பருத்தித்துறையில் அமைச்சர் தகவல்:**

## ஓய்வூதியத்துடன் மீண்டும் டாக்டர்கள் பணிக்கு அழைக்க ஏற்பாடு செய்யப்படும்

### அமைச்சரவைக்கு விரைவில் பிரேரணை

அறுபது வயதுக்கு மேற்பட்ட டாக்டர்களை ஓய்வூதியத்துடன் மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்ள அமைச்சரவையில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும்.

சுகாதார அமைச்சர் பி.பி.தயாரத்ன அண்மையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பேசுகையில் 60 வயதுடன் ஓய்வூதியம் பெறும் டாக்டர்கள் மீள் நியமனம் பெறும் போது ஓய்வூதியம் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த டாக்டர்களின் சேவை கிடைக்காமல் போய்விடுகிறது. டாக்டர்களுக்குப் பற்றாக்குறை இருக்கும் இவ்வேளையில் ஓய்வூதியம் பெறும் டாக்டர்களை ஓய்வூதியத்துடன் மீள நியமிக்க வேண்டும். இதனால் டாக்டர்களின் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும் எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்கான தீர்மானம் அமைச்சரவையில் எடுக்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சர் தயாரத்ன மேலும் கூறியதாவது:-

இவ்வைத்தியசாலையின் குறைபாடுகள் படிப்படியாக நீக்கப்படும். தமிழ் டாக்டர்கள் பலர் தென்பகுதிகளில் கடமையாற்றுகிறார்கள். அவர்கள் யாழ்ப்பாணம் வந்து கடமையாற்ற தயக்கம் காட்டுவது ஏன் என்று தெரியவில்லை. என்றாலும் யாழ்.குடாநாட்டு வைத்திசாலைகளில் கடமையாற்ற டாக்டர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும். தென்பகுதி சிங்கள டாக்டர்களையும் சேவைக்கு அமர்த்தலாம்.

வைத்தியசாலைகளில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து வந்த ஆளணியே இப்போது இருந்து வருகிறது. தற்காலத்துக்கேற்ப வைத்தியசாலைகளில் ஆளணியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் சி.கதிரைவேற்பிள்ளை வைத்தியசாலையின் தேவைகள், குறைபாடுகள்பற்றி விரிவாக எடுத்துக்கூறினார்.

அமைச்சர், வைத்தியசாலைக்கு சில வைத்திய உபகரணங்களை வழங்கியதுடன் வைத்தியசாலையையும் சுற்றிப் பார்வையிட்டார். (க-173)

# பணி பல இயற்றி வாழி!

எங்கள் கல்லூரியில் பிரபல ஆசிரியராக விளங்கியவரும்
தீவகக் கல்விப் பணிப்பாளருமாகிய

**உயர்திரு. ப. விக்கினேஸ்வரன்**

அவர்கள்

இலங்கை கல்வி நிர்வாகசேவை வகுப்பு IIஇற்கு
பதவி உயர்வு பெற்றுள்ளதையிட்டு வாழ்த்துகின்றோம்.



காரைமா நங்கை தானும்
களிப்புடன் ஈன்ற மைந்த
சீரையார் விக்கி னேச
சேவைதனை புரிந்தாய் முறை...
நேரிலா உயர்வு பெற்றாய்
நெஞ்சகம் மகிழ்வு கொண்டோம்
பாரெல்லாம் போற்ற நீயும்
பணி பல இயற்றி வாழி!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
*யா/கலாநிதி ஆ.தியாகராசா*
*ம.ம. வித்தியாலயம்.*

காரைநகர். (3369)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு 1919 - 02 - 05



உதிர்வு 2002 - 04 - 04

## அமரர் இலட்சுமிப்பிள்ளை சரணவமுத்து

*(ஓய்வுபெற்ற ஆசிரியை)*

அவனியில் நாமெல்லாம் வாழ்வாங்கு வாழ வழி சமைத்து
மெய்தனை எமக்காக மெழுகுதிரியாக்கி
நாடெல்லாம் பரந்து வாழும் நின் மக்கள் தனைக்
கலங்க வைத்து
விண்ணதனை நாடி மாதமொன்று சென்றாலும்
ஆறாது உம் நினைவுகள்!

இன்று (03.05.2002) வெள்ளிக்கிழமை எங்கள் இல்லத்தில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*

*நாவற்கட்டை வீதி,*
*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.* (3343)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவினர் எண்ணிக்கை குறைப்பு!

கொழும்பு,மே3

அமைச்சர்களின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள பொலஸாரின் எண்ணிக்கையைக் குறைக்க உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க திட்டமிட்டிருக்கிறார்.

தற்போது அமைச்சர்களின் பாதுகாப்புக்கென ஆயிரத்து 400 பொலீஸார் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த எண்ணிக்கை தேவைக்கு அதிகமானது என்று கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கிடையில் -

பொலீஸ் திணைக்களத்தின் மேலதிகப் பொலீஸ் அணிகளைக் கலைத்துவிட்டு அந்த அணிகளில் உள்ளவர்களை சாதாரண பொலீஸ் கடமைகளில் ஈடுபடுத்த அமைச்சர் அமரதுங்க தீர்மானித்திருக்கிறார்.

இந்த அணிகளைச் சேர்ந்த சுமார் 12 ஆயிரம் பேரில் பெரும் எண்ணிக்கையானவர்கள் வடக்கு - கிழக்கிலேயே பணியாற்றுகின்றனர். (ம)

## கிணறுகளுக்கு குளோரின் போடுங்கள்!

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு குளோரின் பவுடர் வந்துள்ளதால் கிணறுகளுக்கு குளோரின் பவுடர் தேவையானோர் மீசாலை ஐயா கடையடியில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மீளக்குடியமரும் மக்கள் கிணறுகள் இறைத்த பின்னர் குளோரின் பவுடர் அவசியம் போடுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

## கிளிநொச்சியிலும் மேதின நிகழ்வுகள்

வவுனியா,மே3

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கிளிநொச்சியிலும் நேற்றுமுன்தினம் மேதின நிகழ்வுகள் பெரும் எடுப்பில் இடம்பெற்றன.

இந்த ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் பேரணியில் கடந்த கால அரசுகளின் இன அடக்குமுறைகள் மற்றும் முதலாளிவர்க்க அடக்கு முறைகள் அவற்றுக்கெதிரான போராட்டங்கள் என்பனவற்றை சித்திரிக்கும் ஊர்திகளும் கலந்துகொண்டன.

விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி மற்றும் புலிகளின் அரசியல் பிரமுகர்கள், தொழிற்சங்க பிரமுகர்கள் என பலரும் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினர். (ம-4)

# பதவி வெற்றிடம்

## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை வெற்றிடங்கள்

1. a. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (Junior Security Officer)
(30 - முப்பதிற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் உண்டு)
b. பாதுகாப்பு மேற்பார்வையாளர் (Security Supervisor)
2. கல்வித் தகைமை :- க.பொ.த. (சா.த) சித்தி
*(ஓய்வுபெற்ற பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)*
3. a. உயரம்: 5'4" (குறையாமல்)
மார்பு: 32" (குறையாமல்)
*(நல்ல கண்பார்வையும், நல்ல திடகாத்திரமும் இருத்தல் வேண்டும்)*
*(25 வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்)*

சம்பளம்: தொடக்க சம்பளமாக ரூபா 3500/= மற்றும் கடமை வரவுக்குரிய ஊதியம் (Attendance Bonus) வழங்கப்படும்.
(தகுதிக்கேற்ற சம்பள மாற்றம் உண்டு)

நேர்முகப் பரீட்சை: 04.05.2002 சனிக்கிழமை
காலை 10.00 மணி.

*(கிராம அதிகாரியின் ... ன்றிதழ்களுடன் வரவும்)*

*No.347, கஸ்தூரியார் வீதி,*
*(3ஆம் மாடி), யாழ்ப்பாணம்.* (...) - பணிப்பாளர்.

# FORUT - JAFFNA

Vacancy: **Post of Project Co-ordinator (PC)**

There exists a vacancy for the Post of PC
at our office in Point Pedro.

**Major Responsibilities:**

- General administration/management of the office, including financial management.
- Accountable and transparent programme implementation (construction and community development)
- Personnel management, including staff development.
- Appropriate monitoring and reporting in English.

Applicants must be below the age of 50, with at least A/L, preferably University degree and substantial administration/management experience preferably from related fields.

Applications must reach:

**Programme Manager, FORUT,**
*67, Temple Road, Jaffna.*
before 15th May 2002

Women are encouraged to apply,
Only shortlisted candidates will be called for interview.

(3147)

# நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## 2ஆம் ஆண்டு நினைவில்

மண்ணில் 20 - 02 - 1925



விண்ணில் 21 - 04 - 2000

அமரர்
**தில்லையம்பலம் பாலசுப்பிரமணியம்**

## 31ஆம் நாள் நினைவில்

மண்ணில் 25 - 03 - 1932



விண்ணில் 03 - 04 - 2002

திருமதி
**பாலசுப்பிரமணியம் மனோன்மணி**

அப்பா, அம்மா எனும் எமது அன்புத் தெய்வங்களே! நீங்கள் இவ்வுலகை விட்டு நீங்கினாலும் எமைப் பெற்று, வளர்த்து இன்று சமூகத்தில் எம்மை முன்னிருக்கச் செய்த பெருமை உங்களையே சாரும். நீங்கள் எமக்குப் போதித்த சீரான, நேரிய வழியில், முன்னேற்றப் பாதையில் வாழ்ந்து காட்டி உங்கள் கனவுகளை நனவாக்குவதே இன்னாளில் நாம் எடுத்துக்கொள்ளும் சத்தியமாகும்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இன்று (03.05.2002) வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் எமது இல்லத்தில் நடைபெறும் விசேட பஜனையிலும், பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

திருமதி பா. மனோன்மணி இயற்கையெய்திய செய்தி கேட்டு சகல வழிகளிலும் ஈடுசெய்ய முடியாத உதவிகள் புரிந்த, கலந்துகொண்ட அனைவருக்கும் எமது இரு கரம் கூப்பிய வணக்கமும் நன்றிகளும்.

*185/4 கில்னர் லேன்,*
*கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/22006)

ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 09 - 11 - 1920



ஆண்டவன் அடியில் 09 - 05 - 1988

## அமரர் நாகலிங்கம் பாலகிருஷ்ணர்

(பத்தர்)

திதி: 03.05.2002

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஐயா! எங்களின் இதயத் தெய்வமே!
உங்களின் உயர்ந்த இலட்சியங்களை
எங்களது நெஞ்சினிலே சுமந்து நீங்கள் காட்டிய
சத்தியப் பாதையிலே
நாங்கள் உறுதியுடன் செல்லுவோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பூநாறி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.
*(மணியகாரன் வீதி,*
*தெல்லிப்பளை)* (3363)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### ஊர்காவற்றுறை கலாசார சபையின் ஏற்பாட்டில்

# காரைநகரில் சாகித்திய விழா நாளை இரு அமர்வுகளாக!

காரைநகர்,மே3

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கலாசாரசபை நடத்தும் சாகித்திய விழா நாளை சனிக்கிழமை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

முதலாவது அமர்வு காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரும், கலாசாரசபைத் தலைவருமான ஜே.எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் ஆரம்பமாகும். இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், இந்து கலாசார அமைச்சின் ஆலோசகர் ஜரி.சம்பந்தன், முன்னாள் மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக வணிகவியல் துறைத் தலைவர் க. தேவராஜா ஆகியோர் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வர்.

சிவஸ்ரீ. நா. ஞானசம்பந்தக் குருக்கள், யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம், கலாநிதி ஆ.தியாகராஜா, ம.ம.வித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை, சுந்தரமூர்த்தி வித்தியாலய அதிபர் ஆ.பாலகிருஷ்ணன், வியாவில் சைவ வித்தியாலய அதிபர் ஆ.குமரேசமூர்த்தி, வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை அதிபர் திருமதி த.நாகரட்ணம் ஆகியோர் மதியுரை விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். சிறப்பு விருந்தினர்களாக மற்றும் பல பிரமுகர்கள் பங்குபற்றுவர்.

காலை அமர்வில சுமார் 25கலைஞர்கள் பாராட்டி, பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

மாலை அமர்வு மாலை 5.30 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் ஆரம்பமாகும். தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், மின்சாரசபை பொறியியலாளர் எஸ்.சிவானந்தராசா, யாழ். இளவரசி ரெக்ஸ் ரைல்ஸ் உரிமையாளர் எஸ். நமசிவாயம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் செல்வி பரமேஸ்வரி கணேசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

தொடர்ந்து பட்டிமண்டபம், அதியரசன் கூத்து, வசந்தன் கூத்து, தனி இசை, நீதிகேட்டாள் சோழநாட்டாள், அரிச்சந்திர மயானகாண்டம் ஆகிய இசை நாடகங்கள் இடம் பெறும்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் காரைநகரில் முதல் தடவையாக நடைபெறும் மாபெரும் விழா இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

(எ-73)

# மின்சார சபை தனியார் மயமாகாது; ஆனால் அது மறுசீரமைக்கப்படும்

### இப்படிக் கூறுகிறார் கரு ஜயசூரிய

கொழும்பு,மே3

இலங்கை மின்சாரசபை ஒருபோதும் தனியார் மயமாக்கப்படமாட்டாது. அதேநேரம் அதன் நடவடிக்கைகள் மறுசீரமைக்கப்படும் என்று மின்சக்தி அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பல சிக்கல்கள் மத்தியிலும் செயற்பட்டபோதும் இலங்கை மின்சாரசபை ஒருபோதும் தனியார் மயமாக்கப்படமாட்டது. மின்பாவனையில் மக்கள் அக்கறையுடன் செயற்பட வேண்டும். மின்பொருளகளை பாவிப்போர் வீணான மின் விரயத்தினைத் தடுத்தல் வேண்டும்.

கடந்த நான்கு மாதகாலம் மக்கள் மின்சாரப் பாவனையில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டுள்ளார்கள். அதேநேரம், மின்சாரத்தைச் சேர்ப்பதற்கு மிகவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மின்சாரசபை ஊழியர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இலங்கை மின்சாரசபை மேலும் அபிவிருத்தி செய்யப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

(க-12-6)

### விடுதலைப் புலிகள் விவகாரத்தில்

# இந்தியாவின் போக்குக்கு 'ஜால்ரா' போடுகின்றது சிஹல உறுமய!

கொழும்பு,மே3

விடுதலைப் புலிகளின் விடயத்தில் இந்திய அரசு கடைப்பிடித்து வரும் போக்கே மிகச் சரியானதாகும்.

- இவ்வாறு சிங்களப் பேரினவாதக் கட்சியான சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

தெற்கில் இருக்கும் அரசியல்வாதிகள் வன்னிக்குச்சென்று புலிகளின் தலைவரைச் சந்தித்துப் பேசியதையும் நாம் கடுமையாக எதிர்க்கிறோம்

முஸ்லிம் மக்களை வெளியேற்றிய புலிகள், இன்று அவர்களை மீளக்குடியேற வருமாறு அழைத்திருப்பது சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் ஓர் அரசியல் கபட நாடகமே. அவ்வாறு முஸ்லிம்கள் மீளக்குடியேற்றப்பட்டாலும்கூட அவர்களுக்கு எதிராக அநீதியான செயற்பாடுகளே அங்கு இடம்பெறும்.

வன்னியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது புலிகளின் தலைவர் 1985இல் இடம்பெற்ற திம்புப் பேச்சுக்களை வலியுறுத்தியுள்ளார்.இது அவர் தனது கொள்கையில் இருந்து விலகவில்லை என்பதையே எமக்கு எடுத்துக்காட்டுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

(க-6-12)

# வீதி விபத்துக்களில் ஐந்து பேர் காயம்

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் நடந்த வீதி விபத்துக்களில் 5 பேர் காயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக யாழ. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மருதனார்மடம் சந்தியில் நடந்த விபத்தில் சிக்கி எஸ்.சின்னத்தம்பி (வயது -72, உடுவில்) என்பவர் காயமடைந்தார்.

கொட்டடியைச் சேர்ந்த சின்னத்தம்பி துரைசிங்கம் (வயது -42) என்பவரும், உடுவிலைச் சேர்ந்த வி.செலவநாயகம் (வயது-18),கந்தரோடையைச் சேர்ந்த கே.நாகநாதன் (வயது - 52) ஆகியோரே பல்வேறு வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்தவர்கள் ஆவர்.

வன்னியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஒருவர் பஸ்ரியன் சந்தியில் விபத்துக்குள்ளாகிப் படுகாயமடைந்தார்.

மனோகரன் திவாகரன் (வயது -30) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு படுகாயமடைந்தார்.

(ம-6)

# நயினாதீவில் பஸ் சேவை வெள்ளி முதல் ஆரம்பம்

ஊர்காவற்றுறை,மே3

நயினாதீவில் உள்ளூர் பஸ்சேவை கடந்த வாரம் வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய முன்றிலில் நடைபெற்ற இந்த ஆரம்ப வைபவத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபர் மற்றும் வட பிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தினமும் படகுச் சேவை நடைபெறும் நேர ஒழுங்கிற்கேற்ப பயணிகள் வந்து செல்லக்கூடியவாறு இந்த பஸ்சேவை நடைபெறும் என வட பிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இறங்குதுறையில் இருந்து வங்களாவடி வரைக்கும் இந்த பஸ்சேவை நடைபெறும்.

வங்களாவடி நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் கடற்படையினரின் முகாம் அமைந்துள்ள அப்பகுதியூடாக பஸ்சேவை நடத்த இதுவரை காலமும் அனுமதி வழங்கப்படவில்லை. அதனாலேயே பஸ்சேவை நடத்துவது தடைப்பட்டு இருந்தது.

தற்போது இவ்வீதியூடாக பஸ்கள் செல்ல கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

(க-16)

# நாடு முழுவதும் அமைதியாக நடந்து முடிந்த மேதினம்

கொழும்பு,மே3

உலகத் தொழிலாளர் திருநாளான மேதினம் தென்பகுதி உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் அமைதியாக அனுஷ்டிக்கப்பட்டது.

பல வருடங்களுக்குப் பின்னர் - அமைதியான சூழ்நிலையில் நடைபெற்ற மேதினப் பேரணிகளிலும் பொதுக்கூட்டங்களிலும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

ஆளும் ஐ.தே.முன்னணியின் மேதினக் கூட்டம் கொழும்பு மாநகர சபை மைதானத்தில் நடைபெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். எனினும் ஊர்வலம் எதுவும் நடத்தப்படவில்லை.

சுதந்திரக் கட்சி தலைமையிலான பொ.ஐ.முன்னணியின் கூட்டம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் மலையகப் பிரதேசமான ஹப்புத்தளையில் நடைபெற்றது. பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இ.தொ.காவின் மே தினக் கூட்டம் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் ஹட்டனிலும், மலையக மக்கள் முன்னணியின் கூட்டம் அமைச்சர் பெ.சந்திரசேகரன் தலைமையில் நுவரெலியாவிலும் நடைபெற்றன.

ஜே.வி.பியின் கூட்டமும், பேரணியும் கொழும்பு பி.ஆர்.சி மைதானத்தில் நடைபெற்றன. சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்து நடத்திய பொதுக்கூட்டமும் ஊர்வலமும் கொழும்பில் நடைபெற்றன.

வவுனியாவில் இம்முறை மிகவும் எழுச்சிபூர்வமாக மே தின நிகழ்வுகள் இடம்பெற்றன. பூந்தோட்டம் வீதி, ஹொரவப்பொத்தானை வீதி, கண்டி வீதி, யாழ்.வீதி, மன்னார் வீதி ஆகிய இடங்களில் இருந்து புறப்பட்ட ஊர்வலங்கள் மாலை 5மணியளவில் வவுனியா நகரசபை மைதானத்தை வந்தடைந்ததும் அங்கு கூட்டம் நடைபெற்றது. விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் தமிழ்க் கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். பல்லாயிரக்கணக்கானோர் இந்த நிகழ்வுகளில் பங்குகொண்டனர்.

திருகோணமலையில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியான மூதூர் கிழக்கிலும், கிளிவெட்டியிலும் மிகவும் விமரிசையாக மே தின நிகழ்வுகள் இடம்பெற்றன. அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள் பல, ஊர்வலத்தில் பங்குகொண்டன.

இதேவேளை - மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடைபெற்ற மே தின எழுச்சிக் கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வசிக்கும் மக்களும் மேதின நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக அங்கு சென்றிருந்தனர்.

(எ)

# ஏப்ரல் மாத நிவாரணம் தயார்

தென்மராட்சி,மே3

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்து தத்தமது பகுதி கிராம அலுவலர்களிடம் பதிவினை மேற்கொண்ட குடும்பங்களுக்கான ஏப்ரல் மாதத்திற்குரிய நிவாரண 'பெர்மிட்'கள் அந்தந்த கிராம அலுவலர் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்கான பட்டியல்கள் சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

மீளக்குடியமராத மக்கள் தாம் தற்போது தங்கியுள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக ஏப்ரல் மாதத்திற்குரிய நிவாரண 'பெர்மிட்'களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், யாழ்பிரதேச செயலர் பிரிவில் இந்த நிவாரணத்தை விநியோகிக்கும் பொருட்டு யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் நிவாரணத்திற்கான பொருள்களை யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு விநியோகித்து வருகின்றனர்.

இம்முறை நிவாரண விநியோகத்தில் அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(க-17-117)

# அறிவுசார் பொருளாதார கட்டமைப்புக்கு முகம் கொடுக்கத் தயாராக வேண்டும்

### மாணவர்கள், பெற்றோருக்குத் துணைவேந்தர் அறிவுரை

வலி.தெற்கு,மே3

தற்போதைய இளம்சந்ததியினர் அறிவுசார் பொருளாதாரக் கட்டமைப்புக்கு முகம்கொடுத்து சர்வதேச சமூகத்துடன் ஒன்றிணையவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதற்கேற்றவாறு மாணவர்களும், பெற்றோர்களும் எமது மூலவளமான கல்வியிலும் கல்வி நிறுவனங்களினதும் வளர்ச்சிக்கு முழுமையான பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை இணுவில் மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்து உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

இணுவில் மக்கள் துணைவேந்தர் தம்பதியினரை மங்கள வாத்தியத்துடன் காங்கேசன்துறை வீதியில் இருந்து இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்துக்கு அழைத்துவந்து பிரமாண்டமான வரவேற்பளித்தனர்.

இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் துணைவேந்தர் மேலும் கூறியதாவது:-

நல்ல பண்பான, ஒற்றுமை நிறைந்த மக்கள் வாழும் இணுவில் நல்ல நிலவளம், நீர்வளம் கொண்டிருப்பதால் ஆரம்பகாலங்களில் உயர் கல்வி பெறுவதில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் இன்று பல மாணவர்கள் கலை, முகாமைத்துவம் போன்ற நெறிகளில் உயர் கல்வி பெறுகிறார்கள். இவர்கள் இக்கல்வியோடு இணுவில் கிராமத்தின் பெருமையான கலை, சமயம், மொழி, பண்பாடு போன்றவற்றை தொடர்ந்தும் முன்னெடுத்துப் பாதுகாக்கவேண்டும் - என்றார்.

நல்லை ஆதீன குருமுதல்வர், அருட்கவி சீ.விநாசித்தம்பி ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

கலாநிதி சபா ஜெயராசாவின் வரவேற்புரையைத் தொடர்ந்து பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராசா தொடக்கவுரையாற்றினார்.

இணுவில் மக்களால் துணைவேந்தர் பொன்னாடை போர்த்தி, தங்கப் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

மணிவிழா சபையினரால் 'புவிக் கலைவேந்தர்' என்ற விருது துணைவேந்தருக்கு வழங்கப்பட்டது.

யாழ்.மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் வாழ்த்துரை வழங்கும்போது கூறியதாவது:-

"யாழ்பல்கலைக்கழகத்தைச் சமூகமயமாக்கப்பட்ட நிறுவனமாக மாற்றியவர் துணைவேந்தர். அன்று புறநிலைக் கல்வி அலகினை உருவாக்கி, படப்பிடிப்பு, சோதிடம், அழகியல், ஊடகத்துறை போன்ற பல துறைகளில் பலர் பயிற்சி பெற்று உயர்வடைய வைத்தார். கடந்த பத்து ஆண்டுகளில் ஆயிரக்கணக்கில் பட்டதாரிகளை உருவாக்கியுள்ளார். இலங்கையில் உள்ள எல்லாத் துணைவேந்தர்களுள்ளும் பாலசுந்தரம்பிள்ளை முடிசூடா மன்னனாக உயர்ந்து நிற்கின்றார். - என்றார்

கலைப் பீடாதிபதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் பாராட்டுரையில் கூறியதாவது:-

கல்வி, கலை, சமூகம் சமயம் போன்ற துறைகளில் ஆற்றிய பணிக்காக நன்றி கூறி, மக்கள் துணைவேந்தருக்கு மணிவிழா எடுக்கின்றனர். தன்னினம், தன் சமூகம் கல்வி அறிவு பெற்று உயர்வடைய செயற்படும் துணைவேந்தரை ஒரு "மக்கள் துணைவேந்தர்" எனக் கூறலாம். ஆசிரியர்கள், தொழில்நிலையாளர்கள், பயிற்சிக் கலாசாலை ஆசியர்கள் போன்றோருக்கெல்லாம் அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான வாய்ப்புக்களை வழங்கி அறிவுசார் உலகத்தை துணைவேந்தர் உருவாக்கி வருகிறார் எனக் கூறினார்.

இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் தலைமையுரையில் கூறியதாவது:-

இணுவையம்பதி கற்றோர், கலைஞர், இசை வல்லாளர், உழுதூண் புரவலர் எனப் பல்லோர் மலிந்த மண். சைவமும் தமிழும் இசையோடு பொழிந்த புண்ணிய பூமி. சுவைநீர் பொங்கும் இந்த மண்ணிலேயே சான்றோன், தூரநோக்கினன் சேர். பொன் இராமநாதன் உறையுள் கொண்டமையும் நம் எல்லோருக்கும் தெரிந்த வரலாற்று உண்மை. புதுமைக் கவிஞன் பாரதி அவாவிய பெண் கல்விக்கு வித்திட்ட நிலமும் இதுவே. அதற்கொப்ப அவ்வள்ளல் ஆண்களுக்கென ஆற்றிருமகன் பெயரில் கல்லூரி சமைத்தது வனப்புறு திருநெல்வேலியில் அக்கல்லூரி வள்ளல் இராமநாதனின் ஆத்மபலத்தால் புதிய பரிமாணம் கொண்டு வளர்ந்து, இன்று தலைக்கூடமாய் பல்கலைக் கூடமாய் பூத்துக்குலுங்குகிறது.

வேலணை தந்த வியத்தகு முத்து அதன் துணைவேந்தராய் அமர்ந்து பன்முக பரிமாணங்களில் அதன் வளர்ச்சிக்கு உழைப்பதும் இன்றே.

அகவை அறுபது காணும் துணைவேந்தர் அவர்கள் காலத்தின் கனதி உணர்ந்தவர். கல்வியின் பெறுமதி புரிந்தவர். மண்ணின் தேவையை நுனித்து நோக்குபவர்.

நினைப்பும் விழிப்பும் கலைக்கூடத்தின் வளர்ச்சியே என்று மூச்சுவிடும் உத்தமர் எங்கள் துணைவேந்தரே. அதனால் அவர் எம் மண்ணின் - கல்விப் பாரம்பரியச் சொத்து என்பேன். - என்றார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராசா, பேராசிரியர் கலைவாணி இராமநாதன், அதிபர் க.கனகராசா ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். செ.சோதிப் பெருமாள் நன்றி கூறினார். (க-152)

# ஞானக் கண்களால் காணவேண்டிய கடவுளை ஊனக் கண்களால் நாம் காணவே முடியாது!

கடவுள் ஒருவர் இருக்கின்றா; அவர் எமது கண்களுக்குப் புலப்படாமல் நாங்கள் பார்க்கும் இடமெங்கும நீக்கமற நிறைந்திருக்கின்றார். எமது தேகத்தில் பட்டதும் காற்றை நாம் உணர்கிறோம். ஆனால், கண்ணால் அதனைப் பார்க்க முடியாது. எனவே காற்று இருக்கிறது; அதை இல்லை என்று சொல்லமுடியாதல்லவா! அதுவே உண்மை! நிஜம்!! சத்தியம்!!!.

அதேபோல்தான் கடவுளும்; அவரை உணர்ந்துதான் அறிய முடியுமே தவிரக் காணமுடியாது. அந்த உணர்வை எப்படிப் பெற்றுக் கொள்வது? இன்றைய இளம் சமுதாயத்தினிடையே வானளாவ எழுந்து விசுவரூபம் எடுத்து நிற்கின்றது இந்தக் கேள்வி. விடை காணமுடியாத வினா இது.

### கடவுள் எங்கே இருக்கிறார்?

கடவுள் இருக்கிறார் என்பதை எப்படிப் புரிய வைப்பது? பசுவின் உடம்பில் பால் இருந்தாலும் பாலை மடியிலிருந்துதான் பெறுகின்றோம். செவியைப் பிடித்து இழுத்தால் பால் வருமா? வராது. அதே போலத்தான் கடவுளும்! பசுவின் மடியிலே பால் சுரப்பது போல எல்லா இடங்களிலும கடவுள் இருந்தாலும் ஆலயத்திலே தான் அவரின் அருளைப் பெறமுடியும். அதுவே அருள் சுரக்கும் ஆலயம்.

ஒரு சிறு விளக்கம்: எமது வீட்டிலே சுவாமிப் படத்தின் முன்னால் நாம் ஒரு குத்துவிளக்கை ஏற்றி வைக்

## ஞானக்கதிர்

கின்றோம். விளக்கில் திரி எரிகின்றது. ஆனால், அந்த விளக்கு எந்தப் பக்கம பார்த்து எரிகிறது? அதன் வெளிச்சம் எந்தப் பக்கம் படுகிறது என்று யாரேனும் கூறமுடியுமா? சிந்தித்துப் பாருங்கள்! முடியாத காரியம் அது.

விளக்கின் தீப ஒளி எந்தப் பக்கம் நோக்கி எரிகிறது என்று யாராலுமே சொல்ல முடியாது. அது எல்லாப் பக்கமும் ஒளிச்சுடரைப் பிரகாசித்த வண்ணம் நடுவிலே ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது. இதுதான் உண்மை. இதைச் சிந்தித்து உய்த்துணர்ந்து கொண்டால் கடவுளின் யதார்த்த நிலை புரியும்.

### பாலில் படு நெய்போல்

ஒரு பெரிய அண்டாவில் பசுப் பால் ஊற்றி வைக்கப்பட்டிருக்கின்றது. பாலிலிருந்துதான் தயிர், மோர், வெண்ணெய், நெய் எல்லாம் எடுக்கின்றோம். இதையாரும் மறுக்க முடியாது. அதே போல் இறைவனும்! அண்டாவிலுள்ள பாலைப் பார்த்தால் அது ஒரே வெள்ளையாய்த்தான் தெரியும். அதில் இருக்கின்ற தயிரோ, மோரோ, வெண்ணெயோ, நெய்யோ கண்ணுக்குத் தெரியாது புலப்படமாட்டாது. பாலைக் காய்ச்சிப் பக்குவப்படுத்தி வேறு வேறு நிலைகளில் மாற்றித்தான் நாம் அவற்றைப் பெறமுடியும். ஆகவே பாலில் மறைந்திருக்கும் நெய்போல் இறைவனும் உலகில் மறைந்திருக்கின்றான். அவனை எம்மால் காணமுடியாது.

### ஞானக் கண் வேண்டும்

அவனைப் பார்க்கவேண்டுமாயின சாதாரண ஊனக் கண்களால் பார்க்கமுடியாது. அதற்கு ஞானக் கண்கள் வேண்டும். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறியதுபோல் கடவுளைக காண்பதற்கு தியானத்தின் மூலம் எமது மனம் பக்குவப்பட வேண்டும். பிக்கின்றான். நாம் பின்னால் உணர்கின்றோம். அவனன்றி ஓரணுவும் அசையாது. அவன் நினைத்தால் இந்த உலகத்தையே அழித்தொழிக்க முடியும். ஊழிக்காலத்தில் ஊழித்தாண்டவமாடித் தானே சகலதுக்கும் 'காரண கர்த்தா' என்பதைப் பறைசாற்றி நிற்கும் திருக்கோலமே நடராஜர் வடிவம் பஞ்ச கிருத்தியங்களையும் ஆன்மாக்களின் பொருட்டே ஆண்டவன் அருளிச் செய்கின்றான் என்பதை முதலில் நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

### தலையாய கடமை

அனைத்தும் ஆண்டவனிடத்திலேயே ஒடுக்கம்; யாவும் அவனிடத்திலே அடக்கம் என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்த உலகமே உயிர்களின் ஜீவநாடியாக விளங்குகின்றது. ஆகவே மனிதப் பிறவி எடுத்த நாம் அதன் மகத்துவத்தை உணர்ந்து, மாண்பினை அறிந்து வாழ்த்த வாயும

## அவனன்றி ஓரணுவும் அசையாது

திரிகரண சுத்தியுடன் உண்மையான பக்தியின் மூலம்தான் நாம் கடவுளைக் காணமுடியும்.

மனிதனுக்கு "மனச்சாட்சி" என்று ஒன்றிருக்கிறது. அது எப்படித்தான் நாம் நடந்து கொண்டாலும்,"இது பிழை; இது சரி" என்றும் "இது தீயது; இது நல்லது" என்றும் நமக்குச் சுட்டிக் காட்டிக்கொண்டே இருக்கும். அதற்கு யாரும் ஒளித்து ஓட முடியாது. நிழல் எப்படி எம்மைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்குமோ அதே போல்தான் 'மனச்சாட்சி'யும் நம்மைத் தொடர்ந்து வந்து உறுத்திக் கொண்டே இருக்கும்

### நேர்மையே நிறைந்த செல்வம்

கடவுளின் நிலையும் இப்படித்தான். நாங்கள் இந்தப் பூவுலகில் நல்லவர்களாக - நாலு பேர் மதிக்கும்படியாக - வாழ்வதாக இருந்தால் 'நேர்மையே நிறைந்த செல்வம்' என்பதை மனத்தின் கண்ணே வலியுறுத்திப் பதித்துக்கொள்ள வேண்டும். இந்த ஒன்றை நாம் மனத்தில் நிலை நிறுத்திக் கொள்ளுதல் தக்கதே. "உண்மையே உனை உயர்த்தும் ஏணி" என்ற மகாவாக்கியத்தை நாம் மறக்கலாகாது. ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே! இறைவன் நடப் நினைக்கமட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதிக்க வேண்டியது நமது தலையாய கடனாகும்.

**சிவநெறிக் கலாநிதி**
**இராசையா ஸ்ரீதரன்**

வாழ்வில் வாழ்நாள் வரை இரத்த பாசத் தொடர்புள்ள உயிர் மூச்சுக்கள் நடமாடும் போது அதில் அர்த்த புஷ்டியிருக்க வேண்டும். மனித வாழ்க்கையில் ஓர் இலட்சியம் இருக்க வேண்டும் ஒரு நோக்கம், ஒரு குறிக்கோள், ஒரு குறி இருத்தல் வேண்டும். "குறிக்கோள் இல்லாது கெட்டேனே" என்று அப்பரடிகள் குறிப்பிட்டுள்ளவாறு நமது வாழ்வில் ஒரு பிடிப்பு இருத்தல் வேண்டும். அந்தப் பிடிப்பு வருவதற்கும் இறைவனின் பேரருட் கருணையையே நாடித் தேடிக் கொள்ளுதல் சிறந்தது.

மானிடப்பிறவி எடுத்த நாம் அதன மகத்துவத்தையுணர்ந்து மாண்பினை அறிந்து நடப்பது நன்மையைப் பயக்கும். இதற்கு ஒருபோதும் பின்னிற்கக் கூடாது. "உண்மையே உனை உயர்த்தும் ஏணி" என்பதை மனதிற்கொண்டு வாழத்தலைப்படுவோமாக. ★

---

# தொண்டமனாறு நன்னீர்த் திட்டம்:
# கடலுக்கும் நீரேரிக்கும் இடையில் அணை ஏற்படுத்த வேண்டும்
## வல்வை நகரசபைக் கூட்டத்தில் தீர்மானம்

வடமராட்சி,மே3

தொண்டமனாறு கடல்நீரேரியை நன்னீர்த் திட்டமாக மாற்றிய மைக்க கடலுக்கும் நீரேரிக்கும் இடையில் அணை ஏற்படுத்த வேண்டும் என வல்வெட்டித்துறை நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் உப தலைவர் எஸ். சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்தில் -

பல்லாண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இந்நன்னீர்த்திட்டம் தடைப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் இறால் வளர்ப்பை அதிகரிப்பதுடன், நீரேரியுடன் உள்ள வெற்றுத் தரைகளில் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

☆ கீரிமலை - பருத்தித்துறை வீதியை இணைக்கும் தொண்டமனாறு பாலத்தை திருத்தி அமைக்க 25 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டிருந்தது. இப்பாலத்தை தாமதமின்றித் திருத்தி மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்க வேண்டும்.

☆ வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நகர சபைப் பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு வடமராட்சி கிழக்கில் உள்ள மணற்காடு பகுதியில் இருந்து வெளிநாட்ட உதவியுடன் ஆரம்பிக்கப்படவிருந்த குழாய் நீர் விநியோகத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும்.

☆ விவசாயிகளுக்கு வசதியாக விறாச்சிக்குள்த்தைப் புனரமைக்க வேண்டும்.

☆ பருத்தித்துறை டிப்போவினால் நடத்தப்படும் 751, 766 ஆம் இலக்க பாதைகளில் பாடசாலை பஸ் சேவைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். (க-173)

# கணக்காய்வாளர் போராட்டத்திற்கு சட்டத்தரணிகள் சங்கம் ஆதரவு

யாழ்ப்பாணம்,மே.3

தமது சேவைக்காலத்தைக் கவனத்தில் கொண்டு தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கூட்டுறவுத் திணைக்கள உதவிக் கணக்காய்வாளர்கள் மேற்கொண்டு வரும் மறியற் போராட்டத்துக்கு ஊர்காவற்றுறை சட்டத்தரணிகள் சங்கம் தனது ஆதரவை வழங்கியுள்ளது.

தனது ஆதரவை வழங்கிச் சங்கம் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து வருட காலமாகத் தற்காலிக உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றி வரும் தம்மை நிரந்தரமாக்குமாறு கோரி சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உதவிக் கணக்காய்வாளர்களின் நியாயமான போராட்டம் வெற்றிபெற வாழ்த்துவதுடன் ஊர்காவற்றுறை சட்டத்தரணிகள் சங்கம் தனது முழுமையான ஆதரவை அவர்களுக்கு வழங்குகின்றது. (க-10)

---

**வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்**
**பழைய மாணவர் சங்கம்.**

**எமது ஓய்வு பெற்ற அதிபர் சி.ஆறுமுகம் அவர்களைக் கௌரவித்து 12.05.2002இல் நடைபெறவுள்ள மதிய விருந்தில் கலந்துகொள்ளவிரும்பும் பழைய மாணவர், ஆசிரியர்கள் 08.05.2002 இற்குமுன் எம்முடன் தொடர்புகொள்க.**

*T.V .கிருஷ்ணசாமி,*
*ஒழுங்கமைப்பாளர்.*
*T.P.3392*

(3387)

*ந.ஜெயகுமாரன்*
செயலாளர்.
உரும்பிராய்.

---

**கடலோசை - 03 வெளியீட்டு நிதிக்கான**
## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு பிற்போடல்

**யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர் மன்றத்தினால் 06.05.2002 அன்று நடைபெற இருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 21.05.2002 பி.ப. 2.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.**

தலைவர் (3386) செயலாளர்.

---

## உசன் தென் இந்திய திருச்சபை

*'நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசித்து, உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்து கொள்ளுவேன.'* (சங்.5:7)

**உசன் தென் இந்திய திருச்சபையில் 28.04.2002 இல் இருந்து கடவுளின் கிருபையால் மீண்டும் ஆராதனைகள் ஆரம்பமாகி உள்ளன. எதிர்வரும் 05.05.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு பரிசுத்த நற்கருனை ஆராதனை நடைபெறும்.**

**திருச்சபை மக்கள் அனைவரையும் இந்த ஆராதனையில் பங்குபற்றி இறை ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.**

சேகர ஊழியன், நிர்வாகத்தினர்
அருட்திரு.T.H.வசந்தகுமார்.

(3380)

---

## பிற்போடப்பட்டுள்ளது

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்மன்ற 'தமிழோசை' மலர் வெளியீட்டு நிதிக்காக நேற்று (02.05.2002) வியாழக்கிழமை அதிர்ஷ்டம் பார்க்க இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் 25.06.2002 அன்று மாலை 5 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.**

பா.சிறீபவன்
*செயலாளர்*

(3379)

---

## G.C.E. A/L 2002
**CHEMISTRY**

**விற்பனையாகின்றன**

மாதிரி வினாப்பத்திரங்கள் விடைகளுடன்

①, ②, ③, ④, ⑤, ⑥, ⑦, ⑧, ⑨

**By: T.Murugananthan B.Sc.**

**கிடைக்கும் இடங்கள்:**

- Sivan Malika Ltd. 166, K.K.S. Road.
- Sri Lanka book Depot, K.K.S. Road.
- Poobalasingham book Depot, Bus Stand.

*தொடர்புகளுக்கு:-* **077/417149** **e-mail: murugananth@hotmail.com**

(C21976)

---

## வீதித் தடைகள் அகற்றப்பட்டன

நவாலி,மே3

நவாலி சித்தாமணிப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த வீதித்தடைகள், சோதனைச் சாவடிகள் என்பன அகற்றப்பட்டுள்ளன.

இதனால் மக்கள் எவ்வித இடையூறுமின்றி செல்லக்கூடியதாக உள்ளது. (க-100)

## படையினரால் பாதை செப்பனிடப்படுகிறது

தென்மராட்சி,மே3

வரணி சும்மா கடையடிப் பகுதியில் பொதுமக்கள் பாவனைக்கு திறக்கப்பட்டுள்ள பாதை படையினரால் செப்பனிடப்பட்டுவருகின்றது.

டிராக்டர்களில் களிமண் கொண்டு வரப்பட்டு வீதியில் பரவும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

(க-117)

---

**புத்தம் புதிய**
**டய்டோ மோட்டார் சைக்கிள்**
**Rs 77.400/=**



ஏக இறக்குமதியாளர்
***செரண்டிப் மோட்டார் எண்டர்பிறைஸ்***
60B,ஸ்ரீசங்கராஜ மாவத்தை,
கொழும்பு - 10.
**தொலைபேசி: 01-341580 -1**
**பக்ஸ்: 01-438425**
நாடுமுழுவதும் உள்ள அங்கீகாரம் பெற்ற விற்பனைமுகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
(C/22007)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது கழக ஆயுள்கால அங்கத்தவர்
## அமரர் க.ஜீவகாருண்யம்(B.A).
*(உதவி முகாமையாளர், வ.பி.போ.ச, காரைநகர்)*

**அவர்களின் மறைவு குறித்து அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேண்டி எமது கண்ணீர்ப்பூக்களை சமர்ப்பிக்கின்றோம்.**

வண்ணை - சாந்தையர் மடம்,
**ஸ்ரீ கற்பகவிநாயகர் கோயில், சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர்.**

(3381)

---

# மரண அறிவித்தல்

## தம்பு தங்கராஜா (சிங்கப்பூர் தங்கராஜா)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற தம்பு - குஞ்சிப்பிள்ளையின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சின்னத்தங்கத்தின் மருமகனும் ஆகிய தம்பு தங்கராஜா காலமாகிவிட்டார்.

அன்னார் சிவயோகத்தின் அன்புக் கணவரும் புஸ்பானந்தன் (லண்டன்), ஆனந்தராணி (கனடா), பேரானந்தன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் வரலக்சுமி (லண்டன்), சிவசுப்பிரமணியம் (கனடா), சித்திரா (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதன், மீரா, துசியந்தன், தாரணி, சத்தியன், சந்தியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2002) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பருத்தித்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ஆனந்த வாசா",*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

(3357)

தகவல்:
த.சிவயோகம்
(மனைவி)

## சின்னஞ்சிறு விளம்பரம்


### SPOKEN ENGLISH

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக் கப் பயில, ந.விக்கினேஸ்வரன் ஆச் சாரி, DIP.CER.IN.SCIENCE PADDINGTION CAMPUS, LONDON, ENGLAND. 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்; நாகலிங்கசுவாமி கள் வீதி, சங்கானை. (3330)

### தேவை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை தரப படும். உடன் தொடர்பு கொள்ள வும். 19,முருகேசர் ஒழுங்கை, முத்தி ரைச் சந்தையடி நல்லூர். (3373)

### விற்பனைக்கு

TECHNICS PIONEER SUNSUI ONKYO LO-D BOX வகை களும் இவற்றிற்குரிய AMPLIFIER, PINEER, JVC, AIWA, CD SET வகைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச.சண்முகநாதன், முத்தட்டுமடம், K.K.S. வீதி, கோண்டாவில் மேற்கு. (3377)

45 நாள் நிரம்பிய பூச்சி நீக்கிய நல்லின அல்ஷேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.தயாநிதி, கொக்குவில் மேற்கு, (பிடாரி அம்மன் கோவிலுக்கு அரு கில்) (3378)

Pantain-ஆட்டப்புறா, ஜிப்சொன், சைனா ஆகிய புறாக்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. வரதராஜா, இலட்சுமி பவான்கபே, புனித அந்தோனியார் கோவில் அரு கில், Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். (3376)

### வீடு விற்பனைக்கு

இல.3,சென்.பற்றிக்ஸ் வீதியில் உள்ள (பிரதான வீதிக்கு அண்மை யில்) சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு.யோகேந்திரன், 29/53, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (3383)


# சைவ மாநாடு: நாளைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே3

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேர வையின் ஏற்பாட்டில் இன்று வெள் ளிக்கிழமை ஆரம்பமாகும் சைவ மாநாடு தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும். இன்றைய நிகழ்வுகள் நல்லை ஆதீனத்தில் காலை, மாலை யென இரு அமர்வுகளாக இடம் பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன. முதலாம் அமர் வான சைவ சித்தாந்த அரங்கு சுவாமி ஆத்மகனாநந்தா தலைமையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

மங்கள இசையுடன் ஆரம்பமாகும் சைவ சித்தாந்த அரங்கில் யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா வாழ்த்துரை வழங்குவார். இந்து கலா சார அமைச்சர் தி.மகேஸ்வரன் தொடக் கவுரை நிகழ்த்துவார்.

மேலும் 'பெரியபுராணம் - சித்தாந் தத் தெளிவு' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக ஆங்கில போத னாசிரியர் ச.விநாயகமூர்த்தியும், 'மெய்கண்ட சாஸ்திரம் கூறும் விடு தலை' என்ற பொருளில் சென்னை லயோலா கல்லூரி தமிழ் பேராசிரி யர் அ.பாலறாவாயனும், 'கந்தபுரா ணமும் யாழ்ப்பாணக் கலாசாரமும்' என்ற பொருளில் கலாநிதி க.சொக்க லிங்கமும் 'சைவசித்தம் - வாழ்வி யல் நெறி' என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை பேராசிரியர் நா.ஞானக்குமாரனும் உரை நிகழ்த்துவார்கள்.

மாலை அமர்வான 'திருமுறை அரங்கு' பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணஐயரின் தலைமையில் பிற் பகல் 2.15 மணிக்கு ஆரம்பமாகும்.

இளைப்பாறிய நீதிபதி மு.திரு நாவுக்கரசின் வாழ்த்துரையும் பேரா சிரியர் அ.பாலறாவாயனின் தொடக்க வுரையும் இடம்பெறும். தொடர்ந்து 'தேவாரம் சுட்டும் சித்தாந்த வாழ்வு' எனும் தலைப்பில் சென்னைப் பல் கலைக்கழக தத்துவத்துறைத் தலை வர் பேராசிரியர் இரா.கோபாலகிருஷ் ணனும் 'சித்தாந்தத் தேனமுதம் திரு வாசகம்' என்ற தலைப்பில் ச.விநாயக மூர்த்தியும், 'பல்லவர் கால பக்திநெறி' என்ற தலைப்பில் யாழ்.பல் கலைக் கழக தமிழ்த்துறை தலைவர் கலா நிதி எஸ்.சிவலிங்கராஜாவும் 'திருமந் திரம் காட்டும் வாழ்வியல்' என்ற தலைப்பில் பலாலி ஆசிரியர் பயிற் சிக் கலாசாலை உப அதிபர் சிவ.மகா லிங்கமும் உரை நிகழ்த்துவர். அதைத் தொடர்ந்து யாழ்.பல்கலைககழக இசைத்துறையை சேர்ந்த எஸ்.தர்ஷனி னின் பண்ணிசையும், யாழ்.பல்க லைக்கழக நடனத்துறை விரிவுரை யாளர் திருமதி கிருஷாந்தி இர வீந்திராவின் நெறியாள்கையில் 'அம் மன் கலைக் கோலம்' எனும் நாட் டிய நடனமும் இடம்பெறும்.

இன்றைய மாநாடு நிகழ்வுகள் குறித்த செய்தி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது குறிப்பிடத் தக்கது.

(க-13)

# சூனியப் பிரதேசங்களை மதித்து நடக்கவேண்டும்
## செஞ். குழு கோருகின்றது

யாழ்ப்பாணம்,மே3

ஏ-9 கண்டி வீதியில் முகமாலை, ஓமந்தை, உயிலங்குளம் ஆகிய சோதனை நிலையங்களில் அமைந் துள்ள சூனியப் பிரதேசங்களை மதித்து சகலரும் செயற்பட வேண் டும் என்று செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழு கோரியுள்ளது.

இதுவிடயமாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வினர் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் ஒருமித்த அழைப்பிற்கிணங்க, பொது மக்களின் சுமுகமான போக்கு வரவை உறுத்திப்படுத்த, முகமாலை, ஓமந்தை மற்றும் உயிலங்குளம் ஆகிய பொதுமக்கள் போக்குவரவுக் கடவைகளின் சூனியப் பிரதேசத் தில் பிரசன்னமாக இருக்கின்றனர்.

ஏ-9 யாழ். - கண்டி போக்குவரத் துப்பாதை திறக்கப்பட்ட நாள் தொடக்கம் செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழுவினர் பிரசன்னமாயிருப் பதன் நோக்கம்:

☆ போக்குவரத்துப் பாதையின் ஊடாக பொதுமக்கள் பாதுகாப் புடன் பயணம் செய்வதற்குத் தேவை யான பயணத் தகவல்களை ஸ்ரீலங் காப் படையினருக்கும் தமிழீழ விடு தலைப் புலிகளுக்கும் இடையே பரி மாறுவதன் மூலமாக உத்தர வாதப் படுத்துதல்.

☆ பொதுமக்களின் பயணம் தொடர்பான பிரச்சினைகளை பய ணப் பாதையில் பிரசன்னமாகி யிருக்கும் தொடர்புடையவர்களுக் குத் தெரியப்படுத்துதல்.

☆ சூனியப் பிரதேசத்தை உப யோகப்படுத்துபவர்கள் அதன் முக் கியத்துவத்தைப் பேணி மதிப்பதை உறுதிப்படுத்துதல்.

☆ பொதுமக்களின் வேண்டு கோள்களுக்கு அமைய அவர்களு டன் தொடர்புடைய அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத் தல்.

இரு பகுதியினருடனும் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கமைய செஞ்சி லுவைச் சர்வதேசக் குழுவினர் திங் கள்தொடக்கம் சனிவரை தினமும் காலை 8.30 மணிதொடக்கம் மாலை 5 மணிவரை போக்குவரவுக் கடவை களில் பிரசன்னமாயிருப்பர்.

பயணப்பாதையின் சேவைகள் தொடர்பாக கட்டளைகளிடுவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவி னருக்கு அதிகாரம் ஏதுமில்லை.

(ஐ-3)

### புலிகளின் பகுதியில் மணிக்கூட்டு கோபுரம் திறப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுத லைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள திருப்பழுகாமம் சந்தியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மணிக்கூட் டுக் கோபுரம் ஒன்று திறந்து வைக் கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் மட்டு - அம பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் இதனைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலி களின் புலனாய்வுப் பிரிவின் துணைத தளபதி ரமணனும் கலந்து கொண் டார். (க-4)

# ஜனநாயக வழிமுறை...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகார எண்ணங்கொண்டகருத்தை ஜனநாயக நீரோட்டத்தில் கலந்த உடனேயே அந்தக் கருத்தைக் கைவிடும் என எதிர்பார்க்க முடி யாது.

இருப்பினும் ஆயுதப் போராட் டத்தில் ஈடுபட்டுள்ள அமைப்பு ஒன்று ஜனநாயக நீரோட்டத்தில் கலந்த பின்னர் ஜே.வி.பியால் முன்னெடுக் கப்பட்ட ஆயுதப்போராட்டம் முடி வான தோல்விகண்ட நிலையில் - ஒரு தோற்கடிக்கப்பட்ட சக்தி என்ற நிலை உருவான வேளையிலேயே ஜனநாயக நீரோட்டத்தில் அது இணைந்துகொண்டது.

ஆனால், பிரபாகரனின் விடுதலை புலிகள் அமைப்பு இவ்வேளையில் ஜனநாயக நீரோட்டத்தில் கலக்குமே யானால் தங்கள் போராட்டத்தில் தோற்கடிக்கப்படாத - தோல்வி காணாத - சக்தியாகவே கலந்து கொள்ளும்.

### நிதிப்பிரச்சினை

இன்றுள்ள நிலையில் இந்தப் பிரச்சினைக்குத் தொடர்ந்தும் யுத்த ரீதியான தீர்வினைக் காண முயற் சிக்கும் நிலையில், நாங்களும் இல்லை; எதிர் தரப்பைப் பிரதிநிதித் துவப்படுத்தும் பிரபாகரனும் இல்லை. யுத்த ரீதியான தீர்வினைத் தேடும் முயற்சிக்கு உலகில் கடும் எதிர்ப்பு வளர்ந்து வருகிறது. ஸ்ரீலங்கா, நாடு என்றவகையில் எதிர்நோக்கும் பொருளா தாரப் பிரச்சினைகள் காரணமாகவும், விடுதலைப் புலிகளுக்கு உலக மட் டத்தில் விதிக்கப்பட்டுள்ள தடைகள் காரணமாகவும் போரை நடத்தவேண் டிய தேவை இருப்பினும் நிதிப் பிரச் சினையை இருதரப்பினரும் எதிர் நோக்குகின்றனர்.

யுத்தத்தைக் கைவிட்டு, ஜன நாயக நீரோட்டத்தில் கலந்துகொள் ளத் தேவையான நம்பிக்கை பிரபா கரனுக்கு இருப்பினும் குறிப்பிட்ட காலத்திற்கு தமிழ் மக்களிடையே அவர் மிகப் பலம்வாய்ந்தவராக இருப்பதைத் தடுக்க முடியாது. இருப் பினும் விரைவாக ஜனநாயக அடிப் படைகளுக்குப் பொருந்தும் விதத் தில் அரசியல் செயற்பாடுகளை மாற்றுவதில் அவர் வெற்றிபெறாவிடின் ஜனநாயகச் சுதந்திரங்களை வென் றெடுக்க, பிரபாகரனுக்கு எதிராக தமிழ் மக்கள் படிப்படியாக அணி திரள்வதைத் தடுக்கவும் முடியாது.

முடிவுகாண முடியாத கொடிய யுத்தத்திலும் பார்க்க, தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் பிரபாகரன் பொறுப்பேற்கும். நிர்வாகம்கூட நாட் டுக்கு நன்மையையே பயக்கும். பிர பாகரனை இறுதியாக உரசிப் பார்க்க வேண்டியது யுத்த வரையறைகளுக் குள் அல்ல; நிர்வாக வரையறை களுக்குள்ளேயே ஆகும்.

யுத்தத்தை மேற்கொள்வதிலும் பார்க்க அழிவுகளைச் சந்தித்துள்ள மக்களின் துயர் துடைப்பது கடின மாகும். குறிப்பாக அடிப்படை உரிமை களைப் பாதுகாக்கும் ஜனநாயக வரையறைகளுக்குள் மக்களின் துயர் துடைப்பது மிகவும் சிக்கலானதும் கடினமானதும் ஆகும்.

அந்த நவடிக்கைகளை நிறை வேற்றுவதில் பிரபாகரன் வெற்றிபெறா விடின், என்றோ ஒருநாள் பிரபாகரன் தோல்வியைச் சந்திப்பார். அதுவும் சிங்கள மக்களால் அல்ல; தமிழ் மக்களாலேயே அவர் தோல்வியைச் சந்திக்க நேரிடும். ☆

### ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்,மே3

புதுவருடத்தை முன்னிட்டு சக்தி ஊடக நிறுவனத்தினால் நடத் தப்பட்ட சைக்கிள் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகளில் முதல் பத்து இடங்களையும் பெற்ற வீர வீராங் கனைகளை இன்று வெள்ளிக் கிழமை காலை 11.30 மணிக்கு மாவட்ட செயலக விளையாட்டுத் துறைப் பணிமனையில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(ஒ-6)

### வினாத்தாள் இறுதித் தொகுதியும் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், மே3

தற்பொழுது நடைபெற்று வரும் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையின் இறு தித் தொகுதி வினாத்தாள்கள் செஞ் சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப் பலில் நேற்று எடுத்து வரப்பட்டன.

(க-10)

'பட்டகாலிலே படுவது போன்று' யுத்த அனர்த்தங்களால் தொடர்ந்து அடிமேல் அடிவாங்கிவரும் பிரதேசமாக உள்ளது வடமராட்சி கிழக்குப் பகுதி.

அப்பிரதேசத்தில் போர் ஏற்படுத்திய சீரழிவுகளின் சில காட்சிகள் இங்கே...



வெறும் அரைச்சுவர்களாகக் காட்சியளிக்கும் மருதங்கேணி அரசினர் கிராமிய வைத்தியசாலைக் கட்டடத்தை அரசு அதிகாரிகள் பார்வை யிடுகின்றனர்.



வானமே கூரையான நிலையில் பருத்தித்துறை பிரதேச சபையின் உப அலுவலகம் மருதங்கேணியில்.



வடமராட்சி கிழக்கில் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறாக காட்சியளிக்கும் கடைத் தொகுதி.



சுண்டிக்குளம் பகுதியில் மீளக் குடியமர்ந்தோருக்கு உதவும் கூட்டுறவுக் கடை. (படங்கள்:வடமராட்சி கிழக்கு செய்தியாளர்)

# துரையப்பா விளையாட்டரங்கு விரைவில் நவீன மயமாகும்

யாழ்ப்பாணம்,மே3

புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடி யமர்வு அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கு நவீன மயப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான வேலைத்திட்டங்களை மதிப்பீடு செய்து அறிக்கை சமர்ப்பிக் குமாறு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜய வர்த்தனா சம்பந்தப்பட்ட அதிகாரி களைக் கேட்டுக் கொண்டுள்ளார். மைதா னத்தைச் சுற்றிவர சுற்று மதில் அமைக் கப்பட்டு மதிலுக்கு மேல் கம்பிவலை ஏற்படுத்தப்படவுள்ளது. அத்துடன் ஸ்ரே டியத்தை மேலும் புனரமைத்து பார் வையாளர்களுக்குரிய ஆசனங்கள் பொருத்தப்படவுள்ளன.

இந்த வேலைத் திட்டங்களுக்குரிய மதிப்பீடுகளை யாழ்.செயலக அதி காரிகளும் யாழ்.மாநகரசபையின் பொறியியலாளர்களும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மதிப்பீடுகள் பற்றிய விவரம் விரைவில் அமைச்சர் ஜயலத்துக்கு அனுப்பிவைக்கப்பட விருப்பதாக அதி காரி ஒருவர் தெரிவித்தார்.

(க-4)






நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இடமிருந்து வலமாக மிற்சுயி நிறுவன குழுப் பொதுமுகாமையாளர் கிறிஸ்தோபர் பெர்னாண்டோ, யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன், இணை நிர்வாக இயக்குநர் ஜனகிஹார ஆகியோர் அமர்ந்திருப்பதை மேல் படத்திலும் நிறுவனத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களை கீழ்ப் படத்திலும் காணலாம்.

## குடாநாட்டுப் பொது அமைப்புகளுக்கு 'கொங்கிறீட்' கல் தயாரிப்பு இயந்திரங்கள்

### மிற்சுயி நிறுவனம் வழங்கியது

யாழ்ப்பாணம்,மே3

கொழும்பில் மிற்சுயி சிமெந்து நிறுவனம் 'கொங்கிறீற்' கல் தயாரிக்கும் 6இயந்திரங்களை நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள பொது அமைப்புகள் சிலவற்றுக்கு அன்பளிப்பாக வழங்கியது.

ஒவ்வொன்றும் தலா 42ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த இயந்திரங்களைக் கையளிக்கும் வைபவம் நேற்றுப் பிற்பகல் யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 'மிற்சுயி' சிமெந்து நிறுவன இணை நிர்வாகப் பணிப்பாளர் ஜனகிஹார, குழுப் பொதுமுகாமையாளர் கிறிஸ்தோபர் பெர்னாண்டோ மற்றும் மிற்சுயி நிறுவன தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் அரச அதிபர் உரையாற்றும்போது -

'குடாநாட்டின் தொழில் வளர்ச்சிக்கு கொங்கிறீற் கல் தயாரிக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருப்பது உந்துசக்தியாக அமையும். இவற்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் கற்களை அரச கட்டடத் தேவைகளுக்காகக் கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.'

இதற்காக மிற்சுயி நிறுவனத்தினருக்கு நன்றி.

- என்றார்.

இந்த 6 இயந்திரங்களும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், பிராம்பற்று கிராம அபிவிருத்திச் சங்கம் உட்பட சில பொது நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.

மேலும் இத்தகைய இயந்திரங்கள் நான்கு அடுத்த வாரம் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்படும் என்றும் -

அவை மேலும் சில பொது அமைப்புகளுக்கு கையளிக்கப்படவிருப்பதாகவும் - மிற்சுயி நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஒ-4)

## இன நல்லுறவை வலியுறுத்தும் வகையில்

# வடக்கு - தெற்கு கலைஞர்கள் நடிக்கும் தொலைக்காட்சித் தொடர் நாடகம்

## குடாநாட்டில் விரைவில் படப்பிடிப்பு

யாழ்ப்பாணம்,மே3

இன நல்லுறவை வலியுறுத்தி 'ஏ-9' என்ற பெயரில் தொலைக்காட்சி தொடர் நாடகம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

மகாராஜா கூட்டு நிறுவனங்களின் ஊடகங்களான 'சிரச - சக்தி' தொலைக்காட்சி நிறுவனங்கள் இணைந்து இந்தத் தொலைக்காட்சி நாடகத்தை தயாரிக்கவுள்ளன. தென்னிலங்கைக் கலைஞர்களோடு குடாநாட்டுக் கலைஞர்களும் சேர்ந்து இந்த தொலைக்காட்சித் தொடரில் நடிக்கவுள்ளனர். இதற்கான படப்பிடிப்புகள் குடாநாட்டிலும் இடம்பெறவுள்ளன.

இந்தத் தொடர்நாடகத்தை சிரச தொலைக்காட்சி நிறுவனப் பணிப்பாளர் சிட்னி சந்திரசேகர நெறியாள்கை செய்யவுள்ளார்.

வடக்கு - தெற்கு இடையே இன நல்லுறவை வளர்க்கும் நோக்குடன் இந்தத் தொலைக்காட்சித் தொடர் தயாரிக்கப்படவுள்ளதாக சிட்னி சந்திரசேகர உதயனுக்குத் தெரிவித்தார்.

தொலைக்காட்சி நாடகத்துறையில் நீண்டகால அனுபவம் பெற்றவர் சிட்னி சந்திரசேகர. 'நிதுகும்பா மல்' (தொட்டாச்சிணுங்கிப் பூ), 'குமார யானனி' (இளவரசனே!) போன்ற குறுந்திரைப்படங்களைத் தயாரித்துள்ளார்.

'ஏ-9' தொலைக்காட்சித் தொடருக்கான கலைஞர்களை குடாநாட்டில் இனங்காணும் நோக்குடன் ஆர்வமுள்ள கலைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் சேகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

படப்பிடிப்புப் பிரதேசங்களை நேரில பார்வையிடுவதறகாக நெறியாளர் சிட்னி சந்திரசேகரவுடன் 'சக்தி' தொலைக்காட்சி நிறுவன தயாரிப்பாளர் எஸ்.எம்.வரதராஜன் மற்றும் தொழில்நுட்பவியலாளர் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.



இவர்கள் குடாநாட்டிலுள்ள நாடகக் கலைஞர்களுடன் சந்திப்புகளை நடத்திவருகின்றனர்.

பரீட்சார்த்த முறையில் மேற்கொள்ளப்படும் இந்தப் படப்பிடிப்புக்கு ஒத்துழைப்பு நல்குமாறு 'சக்தி' மற்றும் 'சிரச' நிறுவனங்களின் சார்பில் குடாநாட்டுக் கலைஞர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

## மருதனார்மடம் மேதினக் கூட்டத்தில் பேச்சு:

# வடக்கு – கிழக்கு அதிபர், ஆசிரியர்களுக்கு அரசு 430 கோடி ரூபா வழங்கவேண்டியுள்ளது

## ஆனால் தென்பகுதிக்கு எந்தவிதமான நிலுவையும் இல்லை

யாழ்ப்பாணம்,மே3

வடக்கு - கிழக்கில் கடமையாற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சுமார் 430 கோடி ரூபா பணத்தை மாகாணக் கல்வி அமைச்சு வழங்கவேண்டியுள்ளது. ஆனால் தென்பகுதியில் எந்த நிலுவையும் இன்றி அதிபர்கள், ஆசிரியர்களின் கொடுப்பனவுகளை அரசு வழங்கியுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடபகுதி மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் இதுவரையும் முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆனால் இங்குள்ள மாணவர்களுக்குத் தேவைப்படாத சிங்களப் பாடநூல்கள் அளவுக்கு அதிகமாக அனுப்பிவைக்கப்படுகின்றன.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நாம் சென்று உரிய தரப்பினரைச் சந்தித்தபோது விரைவில் 300கோடி ரூபா பணத்தை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் பல்வேறு புலமைப்பரிசில் திட்டங்களின் கீழ் வெளிநாடுகளுக்குச் சென்றுவரும் வாய்ப்பைப் பெறுகின்றனர். ஆனால் எமது அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இத்தகைய வாய்ப்புகள் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது எனவும் குறிப்பிட்டார்.

லங்கா சிமெந்து லிமிட்டெட் நிறுவனத்தின் கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத் தலைவர் சி. தேவகுணாளன் தனது உரையில்:-

கடந்த 36 தினங்களாக ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நாம் மறியற்போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றோம். ஆயினும் உரிய தரப்பினரால் எமக்கு இதுவரையும் சாதகமான பதில் எதுவும் வழங்கப்படவில்லை. இன்றைய மேநாளில் எமது பிரச்சினை அனைவருக்கும் தெரியப்படுத்துவதில் எமக்கும் ஒரு கடப்பாடு உண்டு. கடந்த பல வருடங்களாக நாம் அனுபவித்து வருகின்ற துன்பதுயரங்களுக்கு விரைவில் நல்லதொரு முடிவு கிடைக்கவேண்டும் - என்றார்.

பனை அபிவிருத்திச் சபையின் செயலாளர் கே.சிவநேசன் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

கொடிய யுத்தம் எமது பகுதியில் எதையுமே விட்டுவைக்கவில்லை. 25 லட்சம் பனை மரங்களும், 19லட்சம் தென்னை மரங்களும் இந்த யுத்தத்தின் காரணமாக அழிக்கப்பட்டுள்ளன. இவற்றை உடனடியாக உருவாக்க முடியுமா? கற்பகதருவான பனையும், அதிக பலனைத்தரும் தென்னையும் தான் குடாநாட்டின் பெரும் சொத்து. இவை அழிக்கப்பட்டமையால் எமது பொருளாதாரமே வீழ்ச்சி கண்டுள்ளது - என்றார்.

வடபகுதி முஸ்லிம் மக்கள் சார்பில் உரையாற்றிய ஹமீட் தெரிவித்ததாவது:-

வடபகுதி முஸ்லிம்களாகிய நாம தமிழ்மக்களுடன் ஒட்டி வாழ்ந்தோமே தவிர அவர்களை வெட்டி வாழவில்லை. ஆனால் எமது மீள்வருகையை இங்குள்ள ஒருசிலர் விரும்பவில்லை. குறிப்பாக ஒரு சில வர்த்தகர்களுக்கு எமது வருகையில் விருப்பமில்லை. நாம் என்றும் தமிழ்மக்களுடன் இணைந்து வாழவே விரும்புகின்றோம். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவன் என்று வாழாமல் எல்லோரும் தமிழ்பேசும் மக்கள் என்று வாழ்வோம் - என்றார்.

(க-10-86)

### பளையில் பதாகைகள்

"ஆனையிறவு மீட்பின் இரண்டாம் ஆண்டு பூர்த்தி ஏப்ரல் 22", 'அக்கினிச் சுவாலை முறியடிப்பின் ஓராண்டு பூர்த்தி ஏப்ரல் 28' ஆகிய வாசகங்கள் அடங்கிய தொங்கு பதாகைகள் பச்சிலைப்பள்ளிப் பகுதியில் காணப்படுகின்றன.

(ஒ-117)

# திக்கம் வடிசாலையைப் புனரமைக்க பல்வேறு திட்டங்கள் நடைமுறையில்!

## பனை அபி.சபைத் தலைவர் விளக்கம்

திக்கம் வடிசாலையைப் புனரமைப்பதற்கு பனை அபிவிருத்திச் சபை பல திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது. கூட்டுறவாளர்களான சீவல் தொழிலாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகவே பனை அபிவிருத்திச் சபை இத்திட்டங்களை அமுல்செய்கின்றது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ.சிவபாதம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திக்கம் வடிசாலை தொடர்பாக வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி விடுத்துள்ள அறிக்கை தொடர்பாக நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

'ஆயுதமுனையில் அபகரிக்கப்பட்ட திக்கம் வடிசாலையை மீட்க கூட்டுறவாளர் முன்வரவேண்டும்' என்று வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி அறைகூவல் விடுத்திருந்தது.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

கூட்டுறவு அமைப்பு வேறு, பனை அபிவிருத்திச்சபை வேறு என்ற கருத்தை ஏற்கமுடியாது. சீவல் தொழிலாளர்களும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவர்களே. அவர்களின் மறுவாழ்வுக்காக பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றோம்.

இந்தச் சபையின் தலைவராகப் பதவியேற்று மூன்று மாத காலத்துக்குள் சீவல் தொழிலாளர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக பல திட்டங்கள் அமுல் செய்யப்பட்டுள்ளன.

சீவல் தொழிலாளர்கள் பனை மரங்கள் மூலம் விரும்பிய அளவு தமது உற்பத்தியைச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் உற்பத்திகளை கீழே ஊற்றும் நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அவர்களினால் உற்பத்தி செய்யப்படும் கள் வீணாகப் போகாமல் அவற்றைக் கொள்வனவு செய்து சாராயம் உற்பத்தி செய்து வருகிறோம். கொளவனவு செய்யும் கள்ளுக்கு வாராவாரம் கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றோம்.

பனை அபிவிருத்திச் சபையின் பணிகளை விரிவுபடுத்த முதற்கட்டமாக கூடுதலான கள்ளை வடிக்க வசதியாக 13 லட்சம் ரூபா செலவில் கொதிகலன் ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளோம். சாராயத்தை தரமானதாகவும், சர்வதேச தரத்துக்கு ஏற்றதாகவும் மாற்றுவதற்காக ஒரு கோடி 65 லட்சம் ரூபா செலவில் இந்தியாவில் இருந்து உபகரணங்கள் கொள்வனவு செய்யவுள்ளோம்.

பனை அபிவிருத்திச் சபை 40 ஆயிரம் குடும்பங்களுக்கு நேரடியாகவும் 15 ஆயிரம் குடும்பங்களுக்கு மறைமுகமாகவும் உதவி வருகின்றது.

திக்கம் வடிசாலை உற்பத்திக்கு 50 சதவீத வரிவிலக்கை அரசு வழங்கியுள்ளது. இந்த வரிவிலக்கு மூலம் கிடைக்கும் நிதி சீவல் தொழிலாளர்களின் புனர்வாழ்வுப் பணிக்குச் செலவிடப்படவிருக்கின்றது. தற்சமயம் ஒரு போத்தல் கள்ளுக்கு செலுத்தப்படும் கலால் வரியை நீக்குமாறு திறைசேரியிடம் கேட்டுள்ளோம். பனை அபிவிருத்திச் சபையின் கீழ் திக்கம் வடிசாலை நிர்வகிக்கப்படுவதால் தான் அரசுடன் பேசி நிவாரணங்களைப் பெற்று வருகின்றோம். கூட்டுறவுச் சங்கத்திடம் இந்த வடிசாலை இருக்குமாயின் இத்தகைய நிவாரணங்களைப் பெறவாய்ப்பு இல்லை.

ஆயுதமுனையில் 60 கோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள், பணம் ஆகியன சூறையாடப்பட்ட போது போராட்டம் நடத்த எந்தக் கூட்டுறவாளரும் முன்வரவில்லை. பனை அபிவிருத்திச் சபைத் தலைவராக நான் பதவியேற்ற பின்னர் சூறையாடப்பட்ட பொருள்களில் ஒரு பகுதியை திரும்பப்பெற்று வடிசாலையை மீள இயக்கினேன். இப்போது பலர் போராட்டம் நடத்த முன்வருகிறார்கள். அன்று போராட்டம் நடத்தப் பின்னடித்தவர்கள் இன்று போராட முன்வந்துள்ளது வேடிக்கையாக இருக்கிறது.

பனை அபிவிருத்திச்சபை கூட்டுறவாளர்களான சீவல் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக என்றும் உறுதியுடன் செயற்படும் - என்றார் அவர்.

(ஐ-3)


## சாராய விற்பனை விலை மாற்றம்

எமது வலிகாமம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற சாராய வகைகளின் மொத்த விற்பனை விலைகள் 03-05-2002 தொடக்கம் பின்வரும் விவரப்படி மாற்றம் செய்யப்படுகின்றதென் பதை வாடிக்கையாளர்கள், மதுபான நிலைய முகவர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றேன்.

விகர் (750 மி.லீ.) ~ 195.00

V.S.V. ~ 99 (750 மி.லீ.) ~ 220.00

பொது முகாமையாளர்,
வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய்.

(C/22009)

# உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுத் தேர்வாளருக்கு!

யாழ்ப்பாணம்,மே3

ஜி.சீ.ஈ. (உயர்தரம்) பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு தேர்வாளர்களாகப் பணிபுரிய கொழும்பு செல்பவர்கள் தமது விமானப் பயணச் சீட்டுக்களை 'ஹெலிரூர்ஸ்' யாழ். அலுவலகத்தில் நேரடியாகக் கொள்வனவு செய்யவேண்டும் என்று பட்டப்பின் படிப்புகள் பீட பீடாதிபதி போராசிரியர் அ.சண்முகதாஸ் கேட்டுள்ளார்.

பயணம் செய்பவர்களின் பெயர் விவரங்கள் 'ஹெலிரூர்ஸ்' நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் -

தேர்வாளர்கள் நேரடியாக விமானப் பயணச்சீட்டுக்களைப் பணம் செலுத்தி கொள்வனவு செய்யவேண்டும் என்றும் - அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 10ஆம் திகதி பயணம் மேற்கொள்ள வேண்டியவர்களின் விவரம் வருமாறு:-

திருமதி என்.தங்கராஜா, செல்வி எஸ்.பிரேமினி, திருமதி கே.மேகலா, ஆர்.புஷ்பநாதன், எஸ்.கனகநாயகம், கே.மோகன், செல்வி கே.கணபதிப்பிள்ளை, கே.கிருஷ்ணயோகன், ரி.சண்முகலிங்கம், கே.தில்லைநாதன், ஆர்.சண்முகேஸ்வரன், என்.விக்டர் ஜெயகுமார், செல்வி ஆர்.நடராஜா, கே.சண்முகதாஸ், என்.நாகேந்திரன், பி.ஏ.அன்ரன் பெஞ்சோ, செல்வி ஏ.சிவகுமார், பி.விஜயகுமாரன், கு.சிறீதரன், ஆர்.சிவஞானம், ஆர்.சிவானந்தராசா.

எதிர்வரும் 7ஆம் திகதி செல்ல வேண்டியவர்கள் விவரம் வருமாறு:-

வி.எம்.அல்போன்ஸ், வி.அரசகேசரி. (ஒ-3)


**பொருளியல்**

P.சண்

2004 சனி, ஞாயிறு 12 மணி

2003 சனி, ஞாயிறு 1 மணி (3397)

ஆரம்பம் - 04-05-2002 - 12 மணி (ப.நே.)

**நியூட்டன்** - யாழ்நகர்

ஆரியகுளம் சந்தி அருகில்.


## வணிகர் சம்மேளன நிர்வாக சபை தெரிவு

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற யாழ்.மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனப் பொதுக்கூட்டத்தில் 2002ஆம் ஆண்டுக்கான நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது.

அதில், தலைவராக மு.சுந்தரலிங்கம் (நெல்லியடி வணிகர் கழகம), உபதலைவராக மு.தியாகராசா (சங்கானை வர்த்தகர் சங்கம்), செயலாளராக கா.நித்தியானந்தன் (யாழ். வணிகர் கழகம்), உபசெயலாளராக நா.பிரபாகரன் (குருநகர் வர்த்தகர் சங்கம்), பொருளாளராக ந.சண்முகவேல் (சுன்னாகம் வர்த்தகர் சங்கம்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ)

## ஈழவேந்தனின் உரை இன்று

யாழ்ப்பாணம்,மே3

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறும் முழுநிலாநாள் கருத்தரங்கில் தமிழ் ஏந்தல் மா.க.ஈழவேந்தன் 'ஈழத் தமிழர் போராட்டமும் இந்திய - தமிழகப் போக்கும்' என்னும் தலைப்பில் உரையாற்றவிருக்கின்றார்.

தமிழகத்தில் ஈழப்போராட்டத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டமைக்காக இவர் தமிழகத்தில் இருந்து அண்மையிலேயே நாடுகடத்தப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 26ஆம் திகதி இடம்பெற ஏற்பாடாகி பின்னர் ஒத்திவைக்கப்பட்ட கருத்தரங்கே இன்று இடம்பெறுகின்றது.

யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளரும் பழைய மாணவர் சங்க உபசெயலாளருமான த.அன்பானந்தன் தலைமையில் இன்றைய நிகழ்வு இடம்பெறும். (ம-3)


**BARATHY**

சித்தன்கேணி.

**A/L 2004**

**கலை - வர்த்தகம்**

| | |
|---|---|
| பொருளியல் | - சண் |
| கணக்கீடு | - முகுந்தன் |
| வணிகக்கல்வி | - பசில் |
| அளவையியல் | - R.P.சர்மா |
| தமிழ் | - பாலா |
| இந்துநாகரிகம் | - சுரேஸ் |
| இந்துசமயம் | - தரன் |
| புவியியல் | - குமரன் |
| கிறிஸ்தவம் | - வசந்தன் |
| நாட. அரங். | - சுதன் |
| அரசியல் | - கியூபேட் |
| வரலாறு | - வாகீசன் |
| ஆங்கிலம் | - விஜயபாஸ்கர் |

(3402)

**புதிய பிரிவு**

ஆரம்பம்:04-05-2002 சனிக்கிழமை

அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.



எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெறுவர்.

**விக்னா கல்வி நிறுவனம்**

**A/L 2004** கலை, வர்த்தகம்

ஆரம்பம் - 04-05-2002 சனி 7.00

| | | | |
|---|---|---|---|
| Acc. | - திரு.பாலவாசன் | H/C. | - திரு.பத்மராஜா |
| Eco. | - திரு.விக்கி | Geo. | - திரு.பாபு |
| Com. | - திரு.நந்தீஸ் (9-10) | Hist. | - திரு.சுதன் |
| | திரு.யசோ (7-8) | P/Sci. | - திரு.றொபின்சன் |
| Log. | - திரு.சயந்தன் | Chri. | - திரு.வசந்தன் |
| Tam. | - திரு.குழந்தை (7-8) | Dram. | - திரு.மதி |
| | திரு.லிங்கம் (10-11) | Eng. | - திரு.ஜெயக்குமார் |

(3400)



**பொதுக்கூட்டம்**

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தைச் சார்ந்த அனைத்துவருட மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம் இன்று (03-05-2002) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00மணியளவில் $CH_3$, $MH_3$ மண்டபங்களில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

முகாமைத்துவ கற்கைகள்,
வணிகபீட மாணவர் ஒன்றியம்.

(3406)


# மரண அறிவித்தல்கள்

## திரேசம்மா அந்தோனிப்பிள்ளை

குருநகரைச் சேர்ந்த திரேசம்மா அந்தோனிப்பிள்ளை நேற்று (02.05.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அவுறான் - தங்கம் தம்பதியினரின் புதல்வியும் காலஞ்சென்ற அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் பிரான்சிஸ் (புகையிரத நிலையம், திருகோணமலை), மரியதாஸ் (அரச மரக் கூட்டுத்தாபனம், நல்லூர்), சூசைதாசன் கிறிஸ்தோப்பர் (ஆசிரியர், முன்னாள் புனித ஜோசப் வித்தியாலயம்), அகஸ்ரின் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி), வோல்டர் (ஜேர்மனி), இம்மனுவேல் (ஜேர்மனி), அன்ரனீற்றா ஆகியோரின் அருமைத் தாயாரும் பிரபாவதி (உயரப்புலம், ஆனைக்கோட்டை), லூர்துநாயகி, டொறத்தி, மேசிடெய்சி (ஆசிரியை, முன்னாள் புனித சென். சாள்ஸ் வித்தியாலயம்), கிறசன்சியா (கிளி), ஸ்ரெபி (ஜேர்மனி), குமுதா (ஜேர்மனி), அன்ரனி (ஆசிரியை, புனித மரியாள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் றெஜினோல்ட், சுகந்தி, றெமிஜியா, றெனோஜன், டியூக்டிக்சன், லக்சினி, கட்சன், மக்சன், அனுஷியா, ஸ்ரனிஸ்றூபன், சுதா,, ஜெனி, அடம்ஸ் சுமித், சிறிசாந், தனுஜா, கீர்த்திகா, பாரிஜாதா, வினுஷாந், மைக்கல், கிறிஸ்ரி, ஸ்ரெபான், கரோலின், தீபிகா, றோஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*117/2, பாங்சால் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (3403)

தகவல்:
பிள்ளைகள்

## திருமதி பத்மாவதி சிவராசா (புனிதவதி)

வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி சிவராசா (புனிதவதி) நேற்று (02.05.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மருமகளும் ஆனந்தி, சிவரூபன் (டென்மார்க்), சிவறஜனி, சிவநளாயினி (சுவிஸ்), சிவாஸ்கரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசரெத்தினம் (R.R. நித்தம்புவ), பாலராஜி (டென்மார்க்), உமைபாலன், ரவிச்சந்திரன் (சுவிஸ்), சுகந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் நாகேஸ்வரி, பவநாதன், சரஸ்வதி, சதாசிவம் (ஆசிரியர், யாழ். கல்லூரி, வட்டுக்கோட்டை), பங்கையர்ச்செல்வன் (கண்ணன் - கருமாரி சென்ரர் கொழும்பு), காலஞ்சென்ற றஞ்சிதகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோன்மணி, காலஞ்சென்ற நாகேஸ்வரி, பூங்கோதை செல்வரெத்தினம் (மட்டக்களப்பு), நவரெத்தினம் (கட்டார்), செந்தில்வடிவேல் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர், வேலணை / கனடா) ஆகியோரின் மைத்துனியும் சிந்துஜன், கௌசிகன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள்), றம்யா, றதுசன் (டென்மார்க்), ஜிதுசன், பவுத்திரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2002) சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*266,அரசடி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (3404)

தகவல்:
ஆ.சிவராசா (கணவர்)
இ.இராசரெத்தினம் (R.R.)
(மருமகன்)

## கார்த்திகேசு சுந்தரலிங்கம்

**(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - யாழ்ப்பாணம் கச்சேரி)**

புங்குடுதீவைப் பிறப்பிட்மாகவும் யாழ்ப்பாணம் ஒட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சுந்தரலிங்கம் நேற்று (02-05-2002) வியாழக்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நல்லதங்கம் தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியினரின் மருமகனும் சரஸ்வதியின் பாசமிகு கணவரும் ரமேஷ்குமார் (வலம்புரி), நிரஞ்சலா ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி (பிரான்ஸ்), புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), யோகேஸ்வரி (பிரான்ஸ்), லீலாவதி (யாழ். போதனா வைத்தியசாலை, தாதிய உத்தியோகத்தர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் கனகரெத்தினம் (பிரான்ஸ்), குகநேசன் (குகன் போட்டோ), பத்மநாதன் (பிரான்ஸ்), கமலேஸ்வரன் (புகையிரதப் பகுதி உத்தியோகத்தர், புத்தளம்), பத்மாவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை, கனடா), பஞ்சாட்சரம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், கனடா), செல்வத்துரை (உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு), காலஞ்சென்ற லோகேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04-05-2002) சனிக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*64, ஓட்டுமடம் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (3415)

தகவல்:
சு.சரஸ்வதி (மனைவி),
சு.ரமேஷ்குமார் (மகன்).


**யா/மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**வருடாந்த ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்**

காலம் - 19-05-2002 ஞாயிற்றுக்கிழமை

இடம் - கல்லூரி மண்டபம்

ஒன்றுகூடல் காலை 9.00மணிக்கும்

பொதுக்கூட்டம் பி.ப. 1.00மணிக்கும் நடைபெறும்.

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

தலைவர்
திரு.பொ.சுந்தரலிங்கம்.

இணைச்செயலாளர்
1. திரு.ந.பகீரதன்
2. திரு.ம.மணிசேகரன்.

(3399)



**பொருளியற் கல்லூரி**

நாவலர் றோட் யாழ்ப்பாணம். - கே.கே.எஸ். றோட் இணுவில்.

**A/L 2004**
**கலை - வர்த்தகம்**

| பாடம் | யாழ்ப்பாணம் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| நாடக. அரங்கியல் | சுகந்தன் | சுதன் |
| அரசியல் | கியூபேட் | கியூபேட் |
| வரலாறு | வாகீசன் | வாகீசன் |
| ஆங்கிலம் | பிரபல ஆசிரியர் | பிரபல ஆசிரியர் |

புதிய பிரிவு ஆரம்பம்: நாளை (04-05-2002) சனிக்கிழமை

அனுமதியினை இரு இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். (3401)



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அஜித், ஷாலினி, ரகுவரன் நடித்த

**அமர்க்களம்**

(றீஸ்ஸ்)

காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்) (C-21981)

**நாகம்ஸ்** சுன்னாகம்

4ஆவது வெற்றி வாரத்தை நோக்கி

ரொப்ஸ்டார் பிரசாந்த், சிம்ரன், வடிவேலு நடித்த

**தமிழ்**

(றீஸ்ஸ்)

காட்சிகள்:11.00,3.00 (பு.நே.) (3393)

**ராஜா** யாழ்ப்பாணம்

4ஆவது ஜனத்திரள் வாரம்

இளையதளபதி விஜய், உலக அழகி பிரியங்கா சோப்ரா, விவேக நடித்த

**தமிழன்**

காட்சிகள்: 10.30, 2.30, 5.30 (C/21980)



**D.C.M**

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

**2003 கல்வியாண்டு**

G.A.Q.
1st. IN. COM.

ECONOMICS S.வரதராஜன்

ACCOUNTING B.முகுந்தன்

COMMERCE N.உமாகாந்தன்

MATHS தம்பி

ENGLISH ஜெயக்குமார்

ஆரம்பம்: 04-05-2002 சனி 7.15 மணி

**B.A., B.COM.** PART II ஆரம்பம்: 11-05-2003 சனி

(3394)

# கண்டி வீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துறை நடுவப்பணியகத்தில் சு.ப. தமிழ்ச் செல்வனை சந்தித்து சுமார் இரண்டு மணி நேரம் உரையாடினர்.

அப்போது முக்கிய மூன்று விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகத் தெரிகின்றது. அதில் ஒன்று கண்டி வீதிப் போக்குவரத்து சம்பந்தப்பட்டதாகும்.

"இந்தப் போக்குவரத்தில் மக்கள் மிகுந்த இடர்களை எதிர்நோக்குகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு வாரத்தில் ஏழு நாளும் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை பயணிகள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படவேண்டும். யாழ்.குடாநாட்டில் வாழும் லட்சக்கணக்கான பொது மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூரணமாகப் பூர்த்திசெய்வதற்கு வசதியாக உணவு மற்றும் பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனத் தொடரணிகள் இப்பாதை வழியாக வாரத்தில் ஏழுநாள்களும் தினசரி 24 மணிநேரமும் செல்வதற்கு ஒழுங்கு மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த உணவு வாகனத் தொடரணிகளை படையினர் அதிக நேரம் சோதனையிடுவதால் ஏற்படும் தாமதம் தவிர்க்கப்படவேண்டும்" - என்று புலிகள் தரப்பில் கோரப்பட்டது.

இராணுவ அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் முகமாலைப் பகுதியில் 70 க்கும் அதிக வாகனங்கள் தரித்து நிற்பதாகவும் -

இதனால் அவற்றில் ஏற்றப்பட்டிருந்த உணவு, மரக்கறி மற்றும் பழவகைகள் அழுகிப் பழுதடைந்து விட்டன எனவும் -

புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தப்படி கோயில்கள், பாடசாலைகள், அரச கட்டடங்கள் போன்றவற்றிலிருந்து படையினரை வெளியேற்றும் நடவடிக்கையும் -

மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சோதனை நடவடிக்கைகளை நிறுத்துதல், சோதனைச் சாவடிகளை அகற்றுதல் என்பனவும் -

விரைந்து மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அரசியல் பணிகளுக்கென போராளிகள் [illegible] அண்மைக்காலத[illegible]டங்கல்கள், தாமதங்கள், நெருக்[illegible]கள் குறித்தும் இச்சந்திப்பின் போது - தமிழ்ச் செல்வன் எடுத்துரைத்தார்.

முழு தீவுப்பகுதியையுமே இராணுவப் பிரதேசம் எனக் குறிப்பிட்டு அங்கு போராளிகள் அரசியல் பணிக்குச் செல்லவிடாமல் தடுத்த படைத்தரப்பின் செயற்பாடு ஓர் ஒப்பந்த மீறல் என்று அவர் இந்தக் சந்திப்பின் போது குற்றஞ் சுமத்தினார்.

வடக்கு - கிழக்குப் பிராந்தியத்துக்கு இடையிலான கடற் பகுதியில் கடல்வழி மூலமான போராளிகளின் போக்குவரத்து உறுதிப்படுத்தப்பட வேண்டும். இப் பிரயாணங்களின் போது கடற்படையினரின் எந்த விதத் தலையீடும் இருக்கக் கூடாது என்று புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள படி கண்டி வீதி ஊடான படையினரின் போக்குவரத்துக்கு புலிகள் எந்த விதத்திலும் தடையாக இருக்க மாட்டார்கள் என்று தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுவின் உபதலைவரிடம் எடுத்துரைத்தார்.

அரசியல்துறைப் பொறுப்பாளரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் குறித்து கண்காணிப்புக்குழு தலைவருடனும் அரசுடனும் கலந்துரையாடிய பின்னர் ஆக்கபூர்வமான பதிலை தெரிவிப்பதாக அவர் உறுதியளித்தார்.

(உ)

# இலங்கையில் இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி).
பாடு. அதனால் நோர்வேயின் அனுசரணை முயற்சியை ஆதரிக்கிறோம்.

*கேள்வி:* முந்திய சமாதான முயற்சிகளை விட தற்போதைய சமாதான முயற்சிகள் வித்தியாசமானவை என்று நினைக்கின்றீர்களா?

*பதில்:* ஆம், சண்டை 19 வருடங்கள் தொடர்ந்து நடந்ததால் இரு தரப்பும் சண்டையால் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்று உணர்கின்றன. தென்னிலங்கையிலும் அப்படியான எண்ணம் நிலவுகிறது. வடக்கு - கிழக்கிலும் கூட சமாதான தீர்வையே தேட வேண்டும் என்ற உணர்வு பிறந்திருக்கின்றது. முன்னர் இப்படியான நிலை இருந்ததில்லை.

*கேள்வி:* சமாதான முயற்சி பிரச்சினைக்கு தீர்வை ஏற்படுத்துமா?

*பதில்:* ஆம். தீர்வு இருக்கின்றது என்றே நம்புகின்றேன். தனித் தமிழ் ஈழக் கொள்கையை நாம் ஆதரிக்கவில்லை. ஐக்கிய இலங்கையிலேயே பிரச்சினைக்கு தீர்வு காணலாம்; தமிழ் மக்கள் தமது உரிமைகளை பெற்றுக்கொள்ளலாம் என்று கருதுகின்றோம். சர்வதேச சமூகமும் அப்படித்தான் நினைக்கின்றது. புலிகள் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

*கேள்வி:* பேச்சுக்கள் விரைவில் தொடங்க ஏற்பாடாகியிருக்கிறது. பேச்சு தொடங்குவதற்காக இலங்கை அரசு, புலிகள் இயக்கத் தடையை நீக்கினால் அமெரிக்காவும் அந்த நாட்டில் புலித் தடையை நீக்குமா?

*பதில்:* இல்லை. நாமே புலித் தடையைக் கொண்டு வந்தோம். புலிகள் தாம் பயங்கரவாதிகள் அல்லர் என்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றிக் காட்டட்டும். அப்போது தடையை நீக்குவது பற்றி நாமே பரிசீலனை செய்வோம். இலங்கை அரசு தடையை நீக்குமானால் அமெரிக்க அரசும் உடனே அப்படிச் செய்துவிடாது.

*கேள்வி:* திருகோணமலையில் அமெரிக்க அரசு ஒரு கண் வைத்திருக்கிறது என்று கூறப்படுகிறதே?

*பதில்:* நானும் அப்படியான செய்திகளை படித்தேன். சிரிப்புத்தான் வந்தது. அமெரிக்க அரசு திருகோணமலையில் இப்போது கண்வைக்கவும் இல்லை; முன்னர் எப்போதாவது வைத்ததுமில்லை. சிங்கராஜக் காட்டில் ஏவுகணைத் தளம் ஒன்றை அமெரிக்கா அமைக்கப்போகின்றது என்றும் அனுமானங்கள் இருந்தன. அப்படி ஏன் நாம் செய்யவேண்டும்? திட்டவட்டமாகச் சொல்லுகிறேன் இறைமையுள்ள, அழகான இந்த இலங்கை நாட்டிலே இராணுவத் தளம் அமைக்கும் எண்ணம் எமக்கு அறவே இல்லை.

---

## வாகரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றும் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது குறித்து நேற்று தம்மைச் சந்தித்த கண்காணிப்புக் குழுவின் உபதலைவரிடம் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் நேரடியாக முறையிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் படைத்தரப்போ -

தானாக வெடித்துச் சிதறிய புலிகளின் படகின் எஞ்சிய பகுதிகள் இடையே இருந்து 120எம்.எம். மோட்டார்கள் - 15 பெட்டிகள், 82 எம்.எம். மோட்டார்கள் - இரண்டு பெட்டிகள், ஆர்.பி.ஜிக்கள் - 6 ஆகியவற்றை கடற்படைப் படகு ஒன்று மீட்டெடுத்ததாகவும் -

அச்சமயம் அப்படகில் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி ஒருவரும் இருந்ததாகவும் - அறிவித்துள்ளது.

(உ)

---

## மற்றொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கைகளில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இது வெற்றி பெறும என்பதிலும் நாம் உறுதியாக உள்ளோம்"

- இப்படி ராமய நிக்காயவின் பீடாதிபதி மேலும் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளுக்கு மல்வத்தை பீடாதிபதியும் ஆதரவுதர முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-8-12)

## ஒப்பந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லும் முப்படைகளின் தளபதி என்ற வகையிலும் நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படாமல் பாதுகாப்பது எனது கடமையாகும். இதில் அக்கறையுடனேயே இருக்கிறேன்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்காதிருப்பது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து பாதுகாப்புப் படையினரை அப்புறப்படுத்தாமல் இருப்பது, உத்தேச இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் மாத்திரம் ஒப்படைப்பது போன்ற விடயங்கள குறித்து கலந்து பேசி அபிப்பிராயம் பெறப்படுதல் அவசியம்.

இவை சம்பந்தமாகக் குழப்பமான கருத்துக்களும் பரப்பப்படுகின்றன.

நாட்டிற்கும், மக்களுக்கும் நன்மை அளிக்கும் விடயமாக பேச்சு அமையப் போவதை நான் நன்கு உணர்ந்துள்ளேன். இதில் நான் மாறுபட்டிருக்கவில்லை.

வடக்கு - கிழக்கு மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். கௌரவத்துடன் கூடிய தீர்வையே நான் விரும்புகின்றேன் - இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-12-8)

---

## நீர்கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீண்ட காலமாக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஒரு சில வெளிநாட்டவர்கள் உட்பட சுமார் 215 பேர் இவ்வாறு சிறையில் உள்ளனர். இவர்களில் 50 பேர் பெண்களாவர்.

தங்களுக்கு பிணை வழங்கும்படியும் அதற்காக குடியகல்வு, குடிவரவுச் சட்டத்தை திருத்தும்படியும் உண்ணாவிரதிகள் கோரியிருக்கின்றனர்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கையரில் பெரும்பாலானவர்கள் ஆறு மாதங்களுக்கும் கூடுதலாகப் பிணையின்றி வைக்கப்பட்டிருக்கின்றனர்.


NEW SCIENCE COLLEGE
PHYSICS
2004 Batch
அலைகளும் அதிர்வுகளும்
பிரிவு I
ஆரம்பம் - இன்று (03-05-2002)
புதன் - 4.00 - 5.00
வெள்ளி - 4.30 - 5.30
பிரிவு II
ஆரம்பம் - 04-05-2002
சனி, ஞாயிறு - 9.00 - 10.00
By. R.குகன் (B.Sc.)
(3320)

LOGIC
கமல்
2003 A/L பெறுகைமுறை
சனி 2.00 p.m.
2004 A/L எடுப்புக்கள்
சனி 1.00 p.m.
மதுபாரத்
குமாரசாமி வீதி.
(3414)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 2003 ORGANIC
சேதன இரசாயனம்
ஆசிரியர் திரு.மகேஸ்வரன் B.Sc. (Hons)
ஆரம்பம் 4-5-2002 சனி 4.30 ப.நே.
(3328)

CHEMISTRY CENTRE
83, பலாலி வீதி, கந்தர்மடம்
இணைந்த கணிதம்
A/L 2003
உராய்வு, ஈருறுப்பு விரிவு
Sat. (4.30-6.30) Sun. (3.45-4.45)
Tue. (3.00-5.00)
ஆரம்பம் - 04-05-2002
A/L 2004
நேர் கோட்டியக்கம்
பிரிவு I Sat. (3.00-5.00), Sun. (4.30-6.30)
பிரிவு II Mon., Tue., Fri. (7-8.30) a.m. (பு.நே.)
By: P.Senthilnathan (B.Sc.)
(3391)

NEW SCIENCE COLLEGE
JAFFNA.
PHYSICS By:- M.KARUNANITHY B.Sc. (Spl.)
2003 A/L
PAPER CLASS
Tue., Thu. 5.45 - 6.45 a.m.
ஆரம்பம்: 07-05-2002
வெப்ப இயக்கவியல்
Sat., Sun. - 6 - 7 a.m. பிரிவு I
- 3 - 4 பிரிவு II
ஆரம்பம்: 04-05-2002
கடந்த 2002 April பரீட்சையில் பெரும்பாலான வினாக்கள் ஆசிரியரால் நேரடியாக அறிமுகப்படுத்தப்பட்ட வினாக்கள் ஆகும்.
(3385)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**இலட்சுமிப்பிள்ளை சரவணமுத்து**

[சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியை (பன்னம்மா ரீச்சர்)]

அன்னை மடியில் 05.02.1919 ஆண்டவன் அடியில் 04.04.2002

மாணவர்க்குத் தெய்வமாய்
மனமொத்த ஆசிரியர்கட்கும்
காணவரும் பெற்றோருக்கும்
கலங்கரை விளக்கமதாய்
பேணிநிதம் சைவத்துடன்
பெருந்தமிழ்ப் பண்புதானும்
ஆணிமுத்தாய காத்தலட்சுமி
அம்மாவிற்கு அஞ்சலியே!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள்.
சுன்னாகம், மயிலணி, சைவ மகா வித்தியாலயம்.

(சி-21978)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

2001 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்றுத் தந்த கரவைக் கலைவாணி கல்வி நிலையத்தின் மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

செல்வி வே.வாசுகி செல்வி த.தனுஜா





9A,B 9A,B

செல்வன் சி.திலீபன் 7A,B,C
செல்வன் த.ஜனார்த்தனன் 6A, B, 2C, S
செல்வன் க.மதன்ராஜ் 5A, 2B, 2C, S
செல்வன் ச.வினோராஜ் 5A, 2B, 3C

கரவெட்டியின் முன்னணிக் கல்வி நிறுவனம் கலைவாணி கல்வி நிலையம்

பரீட்சையில் சித்தியடைந்த அனைவரையும் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்!
இயக்குநர், ஆசிரியர்கள்
கலைவாணி கல்வி நிலையம், கரவெட்டி.
(3327)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.